பக்கங்கள்: 12+IV = பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 01 வியாழக்கிழமை (13-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:79

### மானிப்பாயில் நேற்று படையினர் அட்டூழியம்

# பெண் போராளிகள் மீது கொடூரமான தாக்குதல்!

## கண்காணிப்புக்குழு அதிகாரி முன்னிலையில் மக்களையும் அடித்து விரட்டியது ராணுவம்

மானிப்பாய்,பெப்ரவரி13

**மானிப்பாய் சந்தியில் அமைந்துள்ள படைமுகாம், ஈ.பி.டி.பி. முகாம் என்பனவற்றின் எதிரே வைத்து விடுதலைப் புலிகளின் எட்டு பெண் போராளிகள் நேற்றுக் காலை இராணுவத்தினரால் பொல்லுகள், கத்திகள் கொண்டு கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.**

**இத்தாக்குதலில் நான்கு பெண் போராளிகள் நெற்றியிலும், முகத்திலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர். ஏனைய நால்வரும் அடிகாயங்களுக்குள்ளாகினர். சம்பவத்தைக் கேள்விப்பட்டு அப்பகுதிக்கு விரைந்து எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்களையும் படையினர் அடித்து விரட்டியிருக்கின்றனர்.**

இச்சம்பவத்தை அறிந்து நூற்றுக் கணக்கான பொதுமக்கள் இராணுவ முகாமை முற்றுகையிட்டனர். தாக்கப்பட்ட பெண் போராளிகளுக்கு உதவிகளை வழங்கினர். மானிப்பாய் வீதி, மூளாய் வீதி ஆகியவற்றில் தடைகளை ஏற்படுத்திய மக்கள், எந்தவொரு வாகனத்தையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அருகில் உள்ள ஈ.பி.டி.பி. முகாம் அருகேயும் மக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களும் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டனர். இச்சம்பவங்களால் அப்பகுதியில் பெரும் பதற்றம் உருவானது. பெருமளவில் கலகம் அடக்கும் பொலீஸார் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். நகரப் பகுதிக் கடைகள் உடனடியாகப் பூட்டப்பட்டன. மக்கள் நடமாட்டமும் குறைந்தது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றுக்காலை 9.40 மணியளவில ஆனைக்கோட்டையில் இருந்து மானிப்பாய் நோக்கி சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் எட்டுப் பெண் போராளிகள் சென்றனர். அவர்கள் மருதடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு சமீபமாகவுள்ள இராணுவ முகாமைக கடந்த சமயம் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் படையினரும் சேர்ந்து அவர்களை வழிமறித்தனர். அதை மீறிப் பெண் போராளிகள் உடுவில் நோக்கிச் சென்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் செயல்!

### கண்காணிப்புக்குழு யாழ்.அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

மானிப்பாயில் விடுதலைப் புலிப் பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் படையினரின் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் செயல் என்பதை மறுக்கமுடியாது என்று யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் யாழ்.அதிகாரி ஒலே புரண்டம் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு நேரில் வந்த அவரிடம் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கடும் ஆட்சேபம்

(12ஆம் பக்கம் பாக்க)

## அரசிடம் கடும் ஆட்சேபத்தை புலிகள் தரப்பு தெரிவிக்கும்

லண்டன்,பெப்.13

நெடுந்தீவு கடலில் இடம்பெற்ற துயர நிகழ்வு, மானிப்பாயில் பெண் போராளிகள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் ஆகிய சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தங்கள் கடும் ஆட்சேபத்தை ஓரிரு தினங்களில் அரசிடம் வெளியிடுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு, மானிப்பாய் சம்பவங்களை விடுதலைப் புலிகளின் தலைமை தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும், அவை பற்றி கடும் தொனியிலான ஆட்சேபம் அரசுத் தரப்பிடம் தெரியப்படுத்தப்படும் என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.(ஐ)

நூலகத்திறப்பு: எதிரும் புதிருமான கருத்துக்கள் 2ஆம் பக்கத்தில்

திறப்பு விழாவுக்கு ஆனந்தசங்கரி வருவார் விரிவான செய்தி கடைசிப் பக்கத்தில்

## போருக்கு எம்மை வலிந்து அழைக்கிறது இராணுவம்!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சீற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.13

மானிப்பாய் சம்பவம் அப்பட்டமான ஒரு யுத்தநிறுத்த மீறல். போராளிகளையும் பொதுமக்களையும் சீண்டி யுத்தத்திற்கு வலிந்து இழுக்க எத்தனிக்கிறது இராணுவம்.

- இவ்வாறு குற்றம் சாட்டினார் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நேற்றிரவு யாழ்.மாவட்ட அரசியல் துறை அலுவலகத்துக்கு செய்தியாளர்களை அழைத்து உரையாடிய இளம்பரிதி, மானிப்பாய் சம்பவம் தொடர்பாகத் தங்கள் கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்டார். அவர் தெரிவித்ததாவது :-

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் படி எமது எந்தவொரு நடவடிக்கையும் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையுடன் அரசுத்தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகளின்படியே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவது தவிர்க்கப்படவேண்



... என்ற நடைமுறை ஒருதலைப் பட்சமாகவே படைத்தரப்பால் தீர்மா

(12ஆம் பக்கம் பாக்க)





நேற்று படையினரால் தாக்கப்பட்ட பெண் போராளிகளில் இருவரையே படத்தில் காண்கிறீர்கள். அவர்களில் ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம். மேலும் படங்கள் உள்ளே.

## 'தினக்குரல்' படப்பிடிப்பாளர் படையினரால் தாக்கப்பட்டார்!

### கமெராவையும் பறித்து வீசினர்

யாழ்ப்பாணம்,பெப்.13

மானிப்பாயில் நேற்று பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவத்தைப் படம் எடுக்கச் சென்ற 'தினக்குரல்' பத்திரிகை படப்பிடிப்பாளரும் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் பிரதேச செய்தியாளர்கள் இருவரும் படையினரால் தாக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களது படப்பிடிப்பு கருவிகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

'தினக்குரல் படப்பிடிப்பாளர் எஸ்.சிவபாலன், படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த வேளை அவரைத் தடுத்த படையினர் பொல்லுகளால் அவரைத் தாக்கினர். கமெராவைப் பறித்து அதில் பதிவுசெய்யப்பட்டிருந்த நுண்படப்பிரதியை அழித்தனர். அவர் வைத்திருந்த ஊடக அடையாள அட்டையையும் பறித்து வீசியிருக்கின்றனர். படையினரின் தாக்குதலினால் அவருக்கு கடுமையான உட்காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேபோன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையின் பிரதேச செய்தியாளர்கள் இருவரும் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அது கேட்டிருக்கிறது. (ஐ-3-8)

## வலி.கிழக்குப் பிரதேச சபை தலைவர் சுடப்பட்டு காயம்!

சாவகச்சேரியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி.அலுவலகத்தில் நேற்றிரவு இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூகுணசிங்கம் (வயது 40) மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலரான பொலீஸ் கான்ஸ்டபிள் சரத் அபயசிங்க (வயது 29) ஆகியோர் காயமடைந்தனர்.

பிரதேச சபையின் தலைவர் இரு கால்களிலும் தொடைப்பகுதியிலும் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்சி அலுவலக வளவில் நின்ற 'பிக்கப்' வாகனத்தில் பிரதேச சபைத் தலைவர் அமர்ந்திருந்த வேளை அருகில் உள்ள பற்றைக்குள் இருந்து அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-10)

# பொதுநூலகத் திறப்பு விழா கூட்டணிக்கு தொடர்பில்லை!

## கலந்துகொள்ள மறுக்கிறார் மாவை

யாழ்ப்பாணம்,பெப்.13



யாழ்.பொது நூலகத் திறப்பு விழா ஒரு பெரும் போராட்ட களமாக மாற்றப்பட்டுவிட்டது. அந்த நிகழ்வில் பங்குபற்றுவது அர்த்தமற்றது. விழாவுக்கு நான் வரமாட்டேன்.

- இப்படிக் கூறினார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

நூலகத் திறப்பு விழா தொடர்பாக கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

நூலகத்தைத் திறப்பது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி இதுவரை கூடி ஆராயவுமில்லை. திறப்பு விழா தொடர்பான எந்த வழிகாட்டலையும் மாநகர சபைக்கு வழங்கவுமில்லை. மாநகர சபையும் இது பற்றி கலந்தாலோசித்ததாகவோ எனக்குத் தெரியவில்லை.

நூலகத்தை எப்படியாயினும் திறப்பது என்று மாநகர சபையினரும், புனரமைப்பு வேலைகள் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட பின்னரே நூலகம் திறக்கப்படவேண்டும் என்று பொதுமக்கள் சார்ந்த அமைப்புக்களும் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துக்களை வெளியிட்டு, போராட்டக்களம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நூலகம் திறக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

இத்தகைய சூழ்நிலையில்-

இந்த நிகழ்விலும் பங்குபற்றப்போவதில்லை - என்றார் மாவை. (ஐ-3)

# சபை உறுப்பினர்களின் முடிவு என்கிறார் செல்லன் கந்தையன்

யாழ்ப்பாணம்,பெப்.13

நூலகத் திறப்புவிழாவை ஒத்திவைக்குமாறு இன்றுவரை (புதன்கிழமை) என்னிடம் யாரும் நேரடியாகக் கேட்கவில்லை.

நேற்றுத் தன்னைச் சந்தித்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் இப்படிக் கூறினார் மாநகர மேயர் செல்லன் கந்தையன். யாழ். மாநகரசபை அலுவலகத்தில் நேற்றுக்காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.



நூலகத் திறப்புவிழா குறித்து மேயர் கந்தையன் தெரிவித்ததாவது:-

கடந்த மூன்று மாதங்களாக பொது நூலகத்தை யார் திறந்து வைப்பது தொடர்பாக பல்வேறு தரப்பினரும் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வந்தனர். இந்தநிலையில், அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன, பிரதம மந்திரியைக் கொண்டு நூலகத்தைத் திறக்கவேண்டும் என்பதில் முனைப்பாக நின்றார்.


இத்தகைய சூழ்நிலையிலேயே முதல்வரே பொதுநூலகத்தைத் திறக்கவேண்டும் என்ற முடிவை மாநகரசபை உறுப்பினர்கள் எடுத்தனர்.

முன்னாள் முதல்வரும் நூலகத்தைத் திறக்கவேண்டும் என்பதில் அக்கறையுடையவராக இருக்கின்றார். நூலகத் திறப்புக் குறித்து நான் அக்கறை காட்டவில்லை. ஆனால், சபை உறுப்பினர்களின் முடிவின் அடிப்படையிலேயே இதனை மேற்கொள்கின்றேன் - என்றார் கந்தையன். (எ-86-8)

# புலிகளோடு ஆலோசிக்காமல் எடுக்கப்பட்ட தீர்மானம் இது!

## ஒத்திவைக்கக் கோருகிறது காங்கிரஸ்

யாழ்ப்பாணம்,பெப்.13



முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படும் போது விடுதலைப் புலிகளை கலந்தாலோசிப்பது நல்லது. எனவே, நூலகத் திறப்புவிழாவை ஒத்திவைத்து பின்னர் ஒரு தினத்தில் நடத்துங்கள்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி இவ்வாறு யாழ். மேயரிடமும், வீ. ஆனந்தசங்கரியிடமும் கேட்டிருக்கிறார்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொது நூல் நிலையத் திறப்புவிழாவை 14.02.2003 வெள்ளிக்கிழமை நீங்கள் நடத்த இருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். பொது நூல்நிலையத் திருத்த வேலைகள் இன்னமும் பூரணமாகப் பூர்த்திசெய்யப்படவில்லை. அதனைப் பூர்த்தி செய்ய 20 கோடி ரூபா மேலும் தேவைப்படுவதாக அறிகிறேன். இந்நிலையில், அவசர அவசரமாக இத்திறப்புவிழாவை நடத்த வேண்டிய தேவை இன்னும் ஏற்படவில்லை. மேலும் இப்படி அவசரமாகத் திறப்புவிழாவை நடத்துவதற்கு பல எதிர்ப்புக்கள் தோன்றியிருப்பதாகவும் அறிகிறேன். அத்துடன், அல்லாது முக்கியமான அரசியல் தீர்வுகள் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்படும்போது விடுதலைப் புலிகளின் யாழ். அரசியற் பிரிவினரையும் கலந்தாலோசித்துச் செய்தல் நன்று.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் என்ற முறையிலும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் இத்திறப்புவிழா நிகழ்வினை பிற்போடும்படி உங்களையும் த.வி.கூ. தலைவர் வீ. ஆனந்தசங்கரி அவர்களையும் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்- என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு தெரிவிப்பது அறிவுடைமையல்ல

## நூலக விவகாரம் பற்றி ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,பெப்.13

எதற்கெடுத்தாலும் எதிர்ப்புத் தெரிவிப்பதுதான் வீரத்தின் அடையாளம் எனச் சிலர் எண்ணுகின்றனர். ஆக்கபூர்வமானவற்றை வரவேற்று அநியாயங்களை எதிர்ப்பதுதான் அறிவுடைமை.

யாழ். பொதுநூலக திறப்புவிழா தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாண மாநகரில் பொது நூலகம் மீண்டும் திறக்கப்படவுள்ள செய்தியறிந்து மிகவும் மகிழ்ச்சி. 1981 இல மே 31ஆம் நாள் யாழ்ப்பாண மாநகராட்சியின் பொது நுலகத்தில் பற்றிக் கொண்ட நெருப்பானது இலங்கைத் தீவின் இனங்களுக்கிடையிலான நெருக்கடியாக உச்சம் பெற்றது வரலாறு. எனினும், மீண்டும் மீணடும் பழைய காயங்களையே தடவிக காலங்கழிக்க முடியாது. அழிவுச் சினனமாக மட்டும் யாழ். பொதுநூலகத்தை பேணிக்கொண்டிருப்பது அறிவு வளர்ச்சிக்கு உதவாது. இதனாலேயே, யாழ்ப்பாணப் பொதுநூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப்பொலிவுபெற துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கருதி செயற்பட்டு வந்தோம். இவ்வகையில், ஜனாதிபதியின் விசேட நிதியில் இருந்து சுமார் 120 மில்லியன் ரூபாய்கள் யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்காக கிட்டுவதற்கும் எம்மால் ஆன பங்களிப்பை நல்கியிருக்கிறோம்.

கட்டடத்தின் அழகில் மயங்குபவர்கள் அதன் அத்திவாரங்கள் பற்றிக் கவலை கொள்வதில்லை எந்த ஓர் அழகிய கோலம் வரைவதற்கும் ஒரு புள்ளிதான் ஆரம்பம். இந்த அரிச்சுவடியைக் கூட புரிந்துகொள்ள முடியாத சிலர், வழமைபோல யாழ்ப்பாணப் பொதுநூலகம் திறப்புவிழா காணபதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் திறக்கப்பட்ட போது இவ்வாறுதான் முழுமையான பல்கலைக்கழகம்தான் வேண்டும் வளாகம் அல்ல எனக் கூறி எதிர்ப்புக் காட்டப்பட்டமையை இப்போதுள்ள மாணவர்கள் ஒரு தடவை நினைவுபடுத்திப்பார்ப்பது நல்லது. (ஐ)

# திருத்தவேலை முடிந்தபிறகு திறப்பதுதான் பொருத்தம்

## பிரதமரின் நிலைப்பாடு இது

கொழும்பு,பெப்.13



புனரமைப்பு வேலைகள் முற்றாக பூர்த்தியடைநத பின்னர் நூலகத்தைத் திறப்பதே நல்லது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியிருக்கிறார்.

அலரிமாளிகையில் நேற்றுப் பிற்பகல் பிரதமரைச் சந்தித்து நூலகத் திறப்புத் தொடர்பாக உரையாடிய போது அவர் இவ்வாறு கூறினார் என்று இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

வேலைகள் முழுமையாக பூர்த்தியாகவில்லை என்று பிரதமரிடம் தான் எடுத்துக்கூறியதாக மகேஸ்வரன் தெரிவித்தார்.

நாளைய திறப்பு விழாவில் அரசுத்தரப்புப் பிரதிநிதிகள் எவரும் பங்குபற்றமாட்டார்கள் என்று பிரதமர் தன்னிடம் கூறியதாகவும் மகேஸ்வரன் மேலும் கூறினார். (ஐ-3)

# திட்டமிட்டபடி நூலகத்தைத் திறக்க சகலரும் ஆதரவு வழங்கவேண்டும்

## யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,பெப்.13

ஏற்கனவே திட்டமிட்டபடி யாழ். நூலகத் திறப்பு விழா நாளை 14ஆம திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். யாழ்.மாவட்ட கல்விச் சமூகம் மற்றும் பொது அமைப்புக்கள் இதற்கு தமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

- இவ்வாறு நேற்றுக் காலை யாழ். மாநகர சபையில் மேயர் செ.கந்தையன் தலைமையில் நடைபெற்ற மாநகர சபை உறுப்பினர்களுக்கான விஷேட கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

மாநகர சபை திறப்பு விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளை இப்பொதுநூலகம் திறந்துவைக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள புத்திஜீவி களும் கல்விச் சமூகத்தினரும், பொதுமக்களும் இத்திறப்பு விழாவுக்கான முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். இதனை நாம் திடீரென மேற்கொள்ளவில்லை. கடந்த 3 மாதங் களுக்கு முன்பிருந்தே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளோம். எனவே, இத திறப்பு விழாவை இப்போது எதிர்ப்பவர்கள் முன்னரே எம்முடன் தொடர்பு கொண்டு இதில் உள்ள பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடியிருக்க முடியும். அதனை விடுத்து, இப்போது எதிர்ப்பது எவ்வகையிலும் நியாயமற்றது - என்று மாநகர சபை உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

நூலகத்தைத் திறப்பதைத் தடுப்பது தொடர்பாக தமிழீழ மாணவர் பேரவை யாழ்.மேயருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள காரணங்களில் எதுவித உண்மையும் இல்லை. இதனை நாம் ஏற்கவும் முடியாது. தமிழீழ மாணவர் பேரவையைத் தவிர வேறு எந்த நபரோ அல்லது அமைப்புக்களோ எமக்கு எதுவித எதிர்ப்பு அறிக்கைகளையும் அனுப்பவில்லை. எனவே, இவர்களுக்காக நூலகத் திறப்பு விழாவை நாம் நிறுத்த முடியாது. எனவே, நாளை 14ஆம் திகதி திட்டமிட்டபடி நூலகத்தைத் திறப்பதற்கு முடிவு செய்துள்ளோம் - என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் மாநகர சபையில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ஐ-8)



பெண் போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதலை அடுத்து மானிப்பாயிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரைப் படத்தில் காணலாம்.



மானிப்பாய்ச் சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று மாலை கூட்டப்பட்ட அவசர கலந்துரையாடலில் கலந்துகொண்ட படைத்தரப்பு, புலிகள் தரப்புப் பிரதிநிதிகள். (படங்கள்:- தேவராஜன்)

# புலிகள் - படையதிகாரிகள் மூன்றரை மணிநேரம் பேச்சு

யாழ்ப்பாணம்,பெப்.13

மானிப்பாய்ப் பகுதியில் பெண்போராளிகளின் இடுப்புப்பட்டி தொடர்பாக இடம்பெற்ற சம்பவம் குறித்து படையினர் - புலிகள் - யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழு ஆகிய முத் தரப்பினரும் உடனடியாக நேற்று மாலை கூடி ஆராய்ந்தனர்.

சுமார் மூன்றரை மணி நேரம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில இராணுவத் தரப்பில் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ்மாவட்ட படைகளின் பிரதித்தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, 512 ஆவது படையணியின் பிரிகேடியர் ரஞ்சித் டிசில்வா, கேணல் செனவிரத்ன ஆகியோரும் -

புலிகள் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பிரதிப்பொறுப்பாளர் செம்மணன் மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த சுரேஷ், நிஷாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத் தலைவர் ஒலே புரொண்டம் கலந்துரையாடலை நெறிப்படுத்தினார்.

கலந்துரையாடலின் இறுதியில் பத்திரிகையாளர்களிடம் பேசிய யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா,


இவ்வாறான அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமலிருப்பதை உறுதி செய்யவும் - பிரச்சினைகளைச் சமாதானமாகப் பேசித்தீர்த்துக் கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ஐ-9-8-)

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயனியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ஈ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# சிமென்ஸின் அதிரடி ஆஸிக்கு வெற்றி!



சதம் குவித்த சிமென்ஸ்

நேற்றுமுன்தினம் நடந்த பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா இடையேயான ஆட்டம் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. கடந்த உலகக் கிண்ண ஆட்டத்தில் பாக்.அணி வெகு சுலபமாகத் தோற்றதால் இம்முறை அது பழிதீர்க்கும் என்றே கருதப்பட்டது. ஆஸ்திரேலிய அணியும் இந்த ஆட்டம் குறித்து மிகவும் அவதானமாக இருந்தது. எனினும், கடந்த உலகக் கிண்ணம் போன்றே இம்முறையும் கோட்டைவிட்டது பாகிஸ்தான்.

நாணயச் சுழற்சியில் பாகிஸ்தான் வென்றது. ஆஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாட அழைத்தது. அதிரடி ஆட்டக்காரர் அடம் கில்கிறிஸ்டும் ஹைடனும் களமிறங்கினர். ஓட்ட எண்ணிக்கை பத்தை எட்டியபோது ஓர் ஓட்டம் மட்டுமே பெற்றிருந்த கில்கிறிஸ்டை பெவிலியனுக்குத் திருப்பினார் அக்ரம். முதல்சுற்று வட்டத்துக்கு வெளியே பந்தை தூக்கி அடிக்க முயன்றார் கில்கிறிஸ்ட். மட்டை சரியாக பந்தைச் சந்திக்கவில்லை. நேரக் கணிப்பு சறுக, பின்னே நகர்ந்த வக்காரின் கைகளுக்குள் பந்து சிக்கிக் கொண்டது. அடுத்து வந்தவர் அணித் தலைவர் பொன்டிங். ஹைடனுடன் இணைந்து ஓட்டங்களைப் பெறமுயன்றார். ஆனால், அக்ரமும் அக்தரும் சிக்கனமாக பந்து வீசினர். முதல் 15 ஓவர்களில் பந்துகளை விளாசித் தள்ளவேண்டும் என்ற ஆஸியின் எண்ணம் கைகூடவில்லை. அணி 57 ஓட்டங்களை எட்டியபோது 27 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த ஹைடனை மீண்டும் பிடுங்கி எறிந்தார் அக்ரம். தொடர்ந்து வந்தவர் மார்ட்டின். வந்து நிலை எடுக்கக் கூட இல்லை. ஒரே ஒரு பந்தில் அவரையும் பிடுங்கி எறிந்தார் அக்ரம். 52 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் இழப்பு என்று பரிதவித்துக்கொண்டிருந்தது ஆஸ்திரேலியா. பாகிஸ்தான் பழி தீர்த்துக் கொள்ளும் என்றுதான் எல்லோரும் நினைத்தனர்.

மைதானத்தில் பாக். வீரர்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் ஆடிக்கொண்டிருந்தனர். ஆஸியின் பக்கம் நம்பிக்கை தரும் விதத்தில் பொன்ரிங் நின்றுகொண்டிருந்தார். விக்கெட்டுக்கள் விரைவாகச் சரிந்ததில் கடும் அழுத்தத்துக்குள்ளாகி இருந்தார் அவர். அதிரடி ஆட்டத்தை கைவிட்டு நிதானமாக ஓட்டங்களைப் பெற முயன்றுகொண்டிருந்தார். அவருடன் இணைந்து கொண்டிருந்தவர் மஹரார். மேலும் 34 ஓட்டங்களைப் பெறுவதற்குள் மஹராரை வெளியேற்றினார் வக்கார். 19 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்ற அவர் ரஷீத் லத்திப்பிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். மறுபுறத்தில் பொன்ரிங் இன்னும் பொறுமையாக ஆடிக்கொண்டிருந்தார். அடுத்து வந்தவர் சிமென்ஸ். பாகிஸ்தானின் தலைவிதியையே

(10ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்காவுக்கு நேற்று முதல் வெற்றி!

எட்டாவது கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 'ஏ' பிரிவு ஆட்டத்தில் தென்னாபிரிக்கா கென்ய அணியை 10 விக்கெட்டுக்களால் வென்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா கென்யாவை துடுப்பெடுத்தாட அழைத்தது. களமிறங்கிய கென்ய அணி 38 ஓவர்களிலேயே தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. அந்த அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஆர்.டி.ஷா 110 பந்துகளில் 7 பௌண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் எவரும் 25 ஓட்டங்களைக் கூடப் பெறவில்லை. குளூஸ்னர் எட்டு ஓவர்கள் பந்து வீசி 2 'மெய்டின்'களுடன் 16 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பொலொக் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிற்னி 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் போஜே 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பேதும் இன்றி, 23.2 ஓவர்களிலேயே 142 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. கிப்ஸ் 66 பந்துகளில் 12 பௌண்டரிகள் 4 சிக்ஸர்கள் உட்பட 87 ஓட்டங்களையும் கேர்ஸ்டன் 63 பந்துகளில் 9 பௌண்டரிகள் உட்பட 52 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 3 கிடைத்தன. 10 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வென்றது. இந்த ஆட்டத்தில் விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் மற்றும் அணித்தலைவர் ஷோன் பொலக் ஆகியோர் தலா இரு பிடிகளையும் உலகின் சிறந்த களத் தடுப்பாளர் ஜொண்டி றோட்ஸ் நேரே சென்ற ஒரு பிடியையும் தவறவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. குளூஸ்னர் ஆட்ட நாயகன். (ம-10)



# பிளமிங்கின் முடிவு தவறு ஜெயசூரிய கூறுகின்றார்

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்புச் செய்ய நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் எடுத்த முடிவு தவறானது என்று இலங்கை அணியின் தலைவர் ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையேயான போட்டியின் போது நியூஸிலாந்து அணியின் தலைவர் பிளமிங் முதலில் பீல்டிங் செய்யத் தீர்மானித்தார்.

இந்தப் போட்டியில் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது.

ஆடுகளம் மாறும் தன்மை கொண்டது போல் காணப்பட்டது. எனவே இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி மிக முக்கியமானதாக இருந்தது என்று போட்டி முடிந்த பின்பு பேட்டியளித்த ஜயசூரிய கூறினார்.

தாம் செய்த தவறை ஸ்ரீபன் பிளமிங்கும் ஒப்புக்கொண்டார். நாங்கள் எதிர்பார்த்ததைவிட ஆடுகளம் வித்தியாசமாக இருந்தது. இது வியப்பளிப்பதாக இருந்தது. ஆட்டத்தின் தொடக்கத்திலேயே நாங்கள் திணற நேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது என்று பிளமிங் தெரிவித்தார்.

வெற்றி குறித்து ஜெயசூரிய கூறுகையில், வேகப்பந்து வீச்சு, சுழற்பந்து வீச்சு இரண்டிலும் சமநிலையாக இருந்ததும், திலகரத்னாவுடனான இணைப்பாட்டமும் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று கூறினார்.

மேலும் இந்தப் போட்டியின்போது கடுமையான வெப்பம் நிலவியதாகவும், துடுப்பெடுத்தாட சிரமமாக இருந்ததாகவும் ஜெயசூரிய கூறினார்.

டைரிஸின் விளையாட்டு மிகவும் அபாரமாக இருந்தது இருப்பினும், ஜெயசூரியவின் ஆட்டம், போட்டியை எங்கள் கையில் இருந்து எடுத்துச்சென்று விட்டது என்று பிளமிங் கூறினார். (ம-10)

# இலங்கையிடம் அடி வாங்கியபின் நியூஸிலாந்து மனம் மாறுகிறது?

இலங்கை அணியுடனான போட்டியில் தோல்வியுற்றமையால் கென்யாவுடனான போட்டியைப் பகிஷ்கரிப்பது குறித்து மீள்பரிசீலனை செய்ய நேரிடலாம்.

- இவ்வாறு நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் கூறியுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி கென்யாவில் நடைபெறவுள்ள போட்டியில் தாம் பங்குபற்றப்போவதில்லை என நியூஸிலாந்து கிரிக்கெட் சபை அறிவிதத்துள்ளது.

இதேவேளை, இலங்கையுடனான தனது ஆரம்பப் போட்டியில் 47 ஓட்டங்களால் அவ்வணி தோல்வியுற்றுள்ளது. இதனால், சுப்பர் சிக்ஸ் சுற்றுக்குத் தகுதிபெறுவதற்கு ஏனைய 4 போட்டிகளிலும் வெற்றிபெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

இது குறித்து நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் கருத்துத் தெரிவிக்கையில் -

அணியின் தோல்விகள் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும் என்பது வெளிப்படையானது. ஆனால், இவ்விடயத்தில் நியூஸிலாந்து கிரிக்கெட் சபை சரியான தீர்மானமொன்றை மேற்கொள்ளும் என நம்புகிறோம்.

- இவ்வாறு பிளமிங் கூறினார்.

இதேவேளை, கென்ய போட்டியில நியூஸிலாந்து அணியைப் பங்குபற்றச செய்யமுடியும் என தான் இன்னும் நம்பிக்கை கொண்டுள்ளதாக சுற்றுப் போட்டியின் இயக்குநர் அலிபச்சர் தெரிவித்துள்ளார். (ம-10)

## SHARP Action of the day



கென்யாவுடனான நேற்றைய ஆட்டத்தில் விளாசும் கிப்ஸ்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

## உலகக் கிண்ண துளிகள்

கிரிக்கெட் மோகத்தில் சிக்கித் தவிக்கும் இந்தியாவின் கொல்கத்தாவின் ரசிகர்கள் சிலர் உலகக் கிண்ண ஆட்டங்கள் நடைபெறும் தினத்தில் நிச்சயிக்கப்பட்ட தமது திருமணத் திகதியை மாற்றி உள்ளனர்.

உலகக் கிண்ணப்போட்டி ஆரம்பமாகிய ஒரு சில தினங்களிலேயே பத்துப்பேர் இவ்வாறு தமது திகதியை மாற்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

★ ★ ★

இந்த உலகக் கிண்ணப் போட்டியின் ஆரம்பத்திலிருந்தே சதங்கள் குவிய ஆரம்பித்துள்ளன. இதுவரை நடந்த ஏழு ஆட்டங்களில் ஐந்து சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. மேற்கிந்திய வீரர் லாரா(116), இலங்கை வீரர் சனத் ஜயசூரிய(120), நியூஸிலாந்து வீரர் டைரிஸ்(141), ஸிம்பாப்வே வீரர் விஷார்ட்(172), ஆஸ்திரேலிய வீரர் சிமென்ஸ்(143) ஆகியோர் சதம் அடித்துள்ளனர்.

★ ★ ★

ஸிம்பாப்வே வீரர்கள் அன்டி பிளவரும் ஒலங்காவும் அந்நாட்டு அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துள்ளதால் உலகக் கிண்ணப் போட்டியில் இருந்து அவர்கள் நாடு திரும்பியதும் ஸிம்பாப்வே அணியில் இருந்து நீக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

அதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ம)

# கறுப்புப் பட்டியுடன் விளையாடிய ஹென்றி ஒலங்காவிற்கு தடை!

ஸிம்பாப்வே ஜனாதிபதிக்கு எதிரான கருத்துக்களைக் கூறிய ஸிம்பாப்வே வீரர் ஹென்றி ஒலங்காவிற்கு அவர் விளையாடிவரும் கழகம் தடை விதித்துள்ளது.

இந்தத் தகவலை தென்னாபிரிக்க வானொலி அறிவித்துள்ளது. ஸிம்பாப்வே, நமீபியா அணிகளுக்கு இடையேயான போட்டி தொடங்க முன், ஸிம்பாப்வே நிலைவரம் குறித்து அன்டி பிளவரும், ஒலங்காவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். இதற்காக ஒலங்கா விளையாடி வரும கழகம் இந்த முடிவை எடுத்ததாக தென்னாபிரிக்க வானொலி அறிவித்துள்ளது. (ம-10)

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

# 90 ஆம் நாள் நினைவலைகள்

**13.02.2003**



**அமரர்**

**கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்**

**(கணபதி கணேசன்)**

உம் ஆத்ம சாந்தி வேள்வியில்
எம் ஆகுதியாய் கண்ணின் நீர்த்துளிகள்!

*மணற்தறை ஒழுங்கை,*
*கந்தர்மடம்.*
(14393)
குடும்பத்தினருடன்
பிரியமானவர்கள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 08 - 04 - 1925



உதிர்வு 14 - 01 - 2003

## அமரர் சின்னத்தம்பி ஐயாத்துரை

(முன்னாள் கோக்குவில் கிராமசபை உறுப்பினரும் R.D.S.தலைவரும்)

பண்பான மொழியால் வழிநடத்தி எம் உயர்வுக்காய் உழைத்த தெய்வமே! என்றென்றும் எம் நினைவலையில் விழித்திருப்பாய்! வானுலகத்தில் இருந்தாலும் எம்மை நன்னெறிப்படுத்த வாழ்த்துக்கள் பல கூறுவாய் ஐயா.

இன்று (13.02.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"நாகேஸ்வரி வாசம்"*
*அரசடி/வைத்தியசாலை வீதி,*
*கோண்டாவில்.*
(14380)
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள்.

# 8ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 22 - 12 - 1942



இறப்பு 12 - 03 - 1995

## அமரர் குப்புசாமி முருகையா

(உரிமையாளர். "லக்சுமி பவான்", புன்னாலைக்கட்டுவன் சந்தி)

திதி:13.02.2003

வாழ்க்கைப் படகை எளிதாய்ச்
செலுத்தும் துடுப்பாய் இருந்தீரே!
இருளாய் வந்த அரக்கன் கையில்
விதியாய்ச் சென்றீரே?
ஆண்டுகள் எட்டு சென்றாலும் என்றும்
உம் நினைவு எம் நெஞ்சினிலே.
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*ஊரெழு கிழக்கு,*
*சுன்னாகம்.*
(14376)
உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## திருமதி பவானி மகேஸ்வரக் குருக்கள்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தீரே!
ஆதரவு மொழி பேசி அரவணைத்த அன்புத் தெய்வமே!
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

வலலனை, வங்களாவடி ஸ்ரீ முருகன் கோயில் முன்னாள் பிரதம குருக்களின் அன்பு இல்லத்தரசியாக விளங்கிய திருமதி பவானி அவர்களின் ஆப்திக வைபவங்கள் 14.02.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணம், மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயில் வீதியிலுள்ள அன்னாரின் சகோதரி திருமதி நிரஞ்சனாதேவி சுப்பிரமணியக் குருக்கள் அவர்களது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே, அந்நிகழ்விலும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வேலக்கைப் பிள்ளையார் கோயிலடி,*
*மானிப்பாய்.*
(14366)
பிரிவால் வருந்தி நிற்கும்:
கணவர், பிள்ளைகள்.

# யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.நகர் கிழக்கு பிரதேச செயலக சமுர்த்தி வங்கி திறப்பு விழா வைபவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் யாழ்மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், விடுதலைப் புலிகளின யாழ்.நல்லூர் கோட்ட பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வி.வீரகத்திப்பிள்ளை, யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச சங்க தலைவர் சி.வி.கே.சிவஞானம், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவா எஸ்.தவரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இந்த வங்கிக் கட்டடம் 46 ஏ, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை என்னும் முகவரியில் அமைக்கப் பட்டுள்ளது. (ஐ-51)

# 3ஆம் ஆண்டின் நினைவலைகளில்...

மலர்வு 18 - 08 - 1933



உதிர்வு 16 - 02 - 2000

## அமரர் குமரையா கந்தசாமி

*(உப தபாலதிபர், கௌதாரிமுனை)*

**திதி: 13.02.2003 - ஏகாதசி**

எங்கள் இதயக் கோவிலின் இதயதீபம் அணைந்து
இன்றுடன் மூன்று ஆண்டுகள் ஆனதுவோ?
வருடங்கள் ஒவ்வொன்றும் உருண்டு ஓடினாலும்
உங்கள் நினைவு மட்டும் என்றும் பசுமையாகவே இருக்கும்
எம் மண்ணில் எமக்கு மட்டும் அல்லாது இறைவனுக்கும்
உங்களைப் பிடித்து விட்டதால் தன்னிடம்
உங்களை அழைத்தானோ?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*12/3, சந்தணமாதா லேன்,*
*பாண்டியன்தாழ்வு,*
*சுண்டுக்குளி.*
(14408)
என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# அறிவித்தல்

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான

## கிளைப் பொதுச் சபைக் கூட்டம்

## காலம் : 2003.02.23

வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட துணைவிதிகளின் 23ஆம் பிரிவின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களை தெரிவுசெய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 2003.02.23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்துத் தங்கள் சனநாயக உரிமைகளைப் பயன்படுத்திக் கூட்டுறவு இயக்கத்தினை சனநாயக ஆளுகை கொண்டதாகச் செயற்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு அலுவலகம்,
857, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

செ. கனகசபாபதி
கூ.அ.உ.ஆணையாளர், யாழ்.மாவட்டம்.

(c/26489)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார், வலைப்பாட்டில் சங்கமமான

| திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) | திருச்செல்வம் கம்சினி | சிவலிங்கம் திருச்செல்வம் |
|---|---|---|
| தோற்றம் 23-06-1974 | தோற்றம் 05-06-1996 | தோற்றம் 08-02-1972 |

**மறைவு 19.02.1997**

***திதி: 14.02.2003***

ஆண்டுகள் ஐந்து ஓடிவிட்டன. தம்பி எங்களால் உங்கள் புன்சிரிப்பையும் ஆறுதலையும் மறக்க முடியவில்லை. கடைசிவரை துணை என நாங்கள் நம்பி வாழ்ந்தோம். நடுவழியில் எங்களைத் தவிக்கவிட்டு எவ்விடம் சென்றீர்கள்? உங்கள் அன்பு முகம் காணாமல் தவிக்கின்றோம். எங்கள் மனம் வேதனையால் மனம் நொந்து கொண்டே இருக்கிறோம். துன்பக்கடலில் மூழ்கித் துடியாய்த் துடித்தீர்களோ? நீங்கள் இல்லாத உலகில் நிம்மதி ஏது?

*தகவல்: க.சிவலிங்கம்*
*கதிரிப்பாய், அச்சுவேலி.*
(14386)
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அக்கா, அத்தான், மருமக்கள்,
அண்ணன்மார்: ஸ்ரீரங்கம், திருப்பதி.

உதயன்

## உள்நோக்கம் கொண்ட கோழைத்தனமான தாக்குதல்

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் எட்டுப்பேர் மானிப்பாயில் வைத்து படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

படைமுகாமுக்கு முன்பாக பெண் போராளிகளை வழிமறித்த படையினர் பலாத்காரமாக அவர்களை சோதனையிட முயன்றிருக்கின்றனர். அத்துடன் போராளிகள் அணிந்திருந்த இடுப்புப்பட்டிகளை அறுத்து எடுத்திருக்கின்றனர். போராளிகள் அதற்கு மறுத்தபோது அவர்களை கண்டபடி தாக்கி காயப்படுத்தியிருக்கின்றனர்.

போராளிகள் தாக்கப்படுவதைக் கேள்வியுற்று ஆத்திரமடைந்த மக்கள் படைமுகாம் முன்பாக திரண்டு வீதிப் போக்குவரத்தை தடைசெய்ததுடன் பெரும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர். மானிப்பாய் பிரதேசத்தில் பெரும் பதற்றமான சூழ்நிலை உருவாகியது. இந்தச் சம்பவம் குடாநாடு முழுவதும் பரவலாக மக்கள் மத்தியில் ஒரு பதற்றமான உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த வாரம் நெடுந்தீவு கடற்பரப்பில் இடம்பெற்ற துயரச் சம்பவம் ஏற்படுத்திய கொந்தளிப்பு உணர்விலிருந்து பொதுமக்களும், போராளிகளும் இன்னமும் முற்றாக மீளாத நிலையில் மானிப்பாய்ச் சம்பவம் 'எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது' போன்று அமைந்துவிட்டது.

நிராயுதபாணிகளாகச் சென்ற பெண் போராளிகளை வழிமறித்து அவர்களை தொட்டு இழுத்து கண்டபடி தாக்கி இடுப்புப்பட்டிகளை அறுத்தெடுத்த செயல் ஓர் அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும். சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்ற கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் அந்த இடத்தில் வைத்தே இதனை ஏற்றுக்கொண்டார்.

போராளிகள் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட பொதுமக்களும் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர். சம்பவம் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் சிலரும் கூட படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருந்தபோது மானிப்பாய் பிரதேசத்தில் பெரும் பதற்றமான நிலை காணப்பட்டது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த புரிந்துணர்வு உடன்படிக்கை வெற்றிகரமாக ஓர் ஆண்டை எட்டியிருக்கின்றது.

இக்காலப்பகுதியில் உடன்படிக்கையின் சரத்துக்களை மதித்துப் பேணுவதில் இரு தரப்புகளும் சிரத்தை காட்டி வந்திருக்கின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில மீறல்கள் நடந்த போதிலும் யுத்தநிறுத்தம் செவ்வனே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது; வருகிறது.

நாட்டுக்கு வெளியே ஐந்து சுற்றுக்களாக நடைபெற்று முடிந்திருக்கின்ற சமாதானப் பேச்சுக்கள் சீராக - எதிர்பார்த்ததை விடவும் நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் வகையில் - முன்னேற்றம் கண்டிருக்கின்றன. என்றாலும் மிக முக்கியமான அரசியல் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கான பேச்சுக்கள் இனிமேல்தான் ஆரம்பமாக இருக்கின்றன.

ஆனால் -

அதற்கு முன்பாக வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் விவகாரத்தில் இடக்குப் பண்ணுகிறது இராணுவம்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு தொடர்பாக இராணுவம் விட்டுக்கொடுக்க மறுத்து விடாப்பிடியாக நிற்பதால நல்லெண்ணப் புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கட்டத்தில் நெடுந்தீவிலும், மானிப்பாயிலும் நடந்து முடிந்திருக்கின்ற மீறல்கள் சமாதானத்துக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றன.

ஒரு தரப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிக்குள் மறுசாரார் ஆயுதங்களுடன், சீருடையுடன் செல்வதை உடன்படிக்கை கட்டுப்படுத்துகிறது. அந்த வகையில் நூற்றுக் கணக்கான புலிகள் இயக்கப் போராளிகள் குடாநாட்டில் நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெண்போராளிகள் அவர்கள் அணியும் உடையின் வசதிக்கு ஏற்ப - இடுப்பில் கட்டிக் கொள்ளும் 'பெல்ட்' ஓர் இராணுவ சாதனம் என்று படைத்தரப்பு ஆரம்பம்முதல் வாதிட்டு வந்தது.

இடுப்புப்பட்டி அணிந்திருந்த காரணத்துக்காக பெண் போராளிகள் படையினரால் தடுக்கப்பட்ட பல சம்பவங்கள் வடக்கு - கிழக்கில் இடம்பெற்றிருக்கின்றன.

விபரீதமான சம்பவங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பெண் போராளிகள் இப்போது சாதாரண பட்டிகளையே இடுப்பில் அணிந்து கொள்கின்றனர். ஆயினும், அந்த ஆடை அமைப்பு அவர்களது சீருடை என்று படைத்தரப்பு தொடர்ந்து ஆட்சேபித்து வருகிறது. ஆனால், மானிப்பாயில் பெண் போராளிகள் தாக்கப்பட்டதற்கு இந்த இடுப்புப்பட்டி விவகாரம் மட்டும்காரணம் அல்ல என்பது அங்கு நடந்த சம்பவங்களின் பின்னணித் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

மானிப்பாயில் சம்பவம் நடந்த படைமுகாம் மற்றும் அதன் அருகே உள்ள ஈ.பி.டி.பி. முகாம் அமைந்த பகுதியூடாகச் செல்லும் போராளிகள் அடிக்கடி வேண்டத்தகாத விதமாக நடத்தப்பட்டு வந்துள்ளனர் என்று புலிகள் குற்றஞ் சாட்டியிருக்கின்றனர். அந்த வகையில் நேற்றைய சம்பவம் ஒரு திட்டமிட்ட தாக்குதல் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஒரு வாரகாலப் பகுதிக்குள் நடைபெற்றிருக்கும் இரண்டாவது சம்பவம் என்ற வகையில் கண்காணிப்புக் குழுவினர் இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பரபரப்பான இந்தக் கட்டத்தில் -

கண்காணிப்புக் குழுவின் பணிக்கு இடையூறு ஏற்படாத வகையிலும், சம்பவத்தின் பாரதூரத்தினால் எழுந்திருக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பு எல்லை மீறி விபரீதங்களுக்கு வித்திடாத வகையிலும் பார்த்துக்கொள்வது - விழிப்புடன் இருப்பது - சமாதானத்தை விரும்பும் சகலரினதும் அதிமுக்கிய கடப்பாடு என்பதை மறவாதிருப்போம்.

கந்தரோடையில் அமைக்கப்பட்டுள்ள

# விகாரையை அகற்றக்கோரி போராட்டம் நடத்த முஸ்தீபு

வலி.வடக்கு,பெப்.13

கந்தரோடையில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி பாரிய அளவில் போராட்டங்களை நடத்த பொது அமைப்புகள் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் வலிகாமம் கோட்ட பொது அமைப்புகள் ஒன்றியத்தினால் மல்லாகத்தில் நடத்தப்பட்டது.

இதில் வலி.தெற்கு, வலி.வடக்கைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் மற்றும் மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்கள் -

கந்தரோடையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை சமாதானத்தை குழப்பும் நோக்கில் அமைக்கப்பட்ட ஒன்றெனவும் -

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கையாக விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகவும் - வலியுறுத்தினார்கள். கந்தரோடையில் விகாரை கட்டப்படுவதைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணியொன்றை நடத்தவும் -

இது தொடர்பாக பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் அரச சார்பற்ற பொது நிறுவனங்களுக்கு மகஜர் அனுப்புவதென கலந்துரையாடலின் முடிவில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கண்டனப் பேரணி சம்பந்தமான பிரசார நடவடிக்கையாக ஊர்ஊராகச் சென்று மக்களுக்கு எடுத்துக் கூறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

# இறந்தவரை எனக்குத் தெரியும்; அவரது கை துண்டிக்கப்பட்டுள்ளது!

## மிருசுவில் படுகொலைகள் வழக்கில் சாட்சியம்

மிருசுவிலில் இடம்பெற்ற படுகொலைகளில் மரணமான ஞானபாலன் ரவிவர்மனை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும். காட்டில் கிடந்த ஷெல் ஒன்றை எடுத்துத் தரையில் அடித்தபோது, அது வெடித்து அவரது ஒருகை ஊனமாக இருந்தது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற மிருசுவில் படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த சின்னத்துரை மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த வழக்கில் முக்கிய சாட்சி இவராவார்.

சாட்சியை அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி சரத் ஜெயமான குறுக்கு விசாரணை செய்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைகளில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். சம்பவத்தில் மேற்படி சாட்சியே தப்பிக்கொண்டவர் ஆவார்.

இந்த வழக்குத் தொடர்பாக ஐந்து இராணுவத்தினருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 'ட்ரயல் அட்பார்' முறையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

'நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையின்போது சின்னத்துரை மகேஸ்வரன் சாட்சியமளித்தார்.

சாட்சியை அரசதரப்பு சிரேஷ்ட சட்டவாதி சரத் ஜயமான நெறிப்படுத்தினார்.

*சரத் ஜயமான:* மிருசுவிலிருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயரும் சந்தர்ப்பம் ஏற்பட்டதுண்டா?

*சாட்சி:* ஆம்.

*சரத் ஜயமான:* காரணம் என்னவென்று கூறமுடியுமா?

*சாட்சி:* யுத்தம் ஒரு காரணம். எங்கள் வீட்டில் அடிக்கடி ஷெல் விழுந்து சேதப்படுத்தியதும் ஒரு காரணம்.

*சரத் ஜயமான:* யுத்தத்தினால் ஏதும் பாதிப்பு இருந்ததா?

*சாட்சி:* பல வீடுகள் சேதமடைந்து போயின.

*சரத் ஜயமான:* வீடுகளை விட்டு எங்கே சென்றீர்கள்?

*சாட்சி:* கரவெட்டிக்கு.

*சரத் ஜயமான:* யார் யார் உங்கள் வீட்டைவிட்டு வெளியேறினீர்கள்?

*சாட்சி:* அப்பா, சகோதரர்கள், நான்.

*சரத் ஜயமான:* வேறு எவரும் மிருசுவில் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தார்களா?

*சாட்சி:* கிராமத்திலிருந்த சுமார் ஆயிரம் பேர்வரை இடம்பெயர்ந்தோம்.

*சரத் ஜயமான:* நீங்கள் மீண்டும் உங்கள் சொந்த இடங்களுக்கு வந்தீர்களா?

*சாட்சி:* யுத்தம் சிறிது குறைந்ததும் மீண்டும் மிருசுவில் கிராமத்திற்கு வந்தோம்.

*சரத் ஜயமான:* யாருடன் வந்தீர்கள்?

*சாட்சி:* எனது நண்பன் ஒருவருடன் வந்தேன்.

*சரத் ஜயமான:* அவரது பெயர் என்ன?

*சாட்சி:* ஞானபாலன்.

*சரத் ஜயமான:* ஞானபாலன் ரவிவர்மன் என்பது சரியா?

*சாட்சி:* ஆம்.

*சரத் ஜயமான:* அவரை உமக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்?

*சாட்சி:* சிறுவயதிலிருந்தே தெரியும்.

*சரத் ஜயமான:* அவரது உடலில் ஊனம் ஏதும் இருந்ததா?

*சாட்சி:* ஆம்.

*சரத் ஜயமான:* என்ன ஊனம்?

*சாட்சி:* இடது கை மணிக்கட்டு துண்டிக்கப்பட்டிருந்தது.

*சரத் ஜயமான:* அதற்கு என்ன காரணம் என்று உமக்குத் தெரியுமா?

*சாட்சி:* காட்டில் கிடந்த ஷெல் ஒன்றை தரையில் அடிக்க முயன்றபோது அது வெடித்து அவரது கை ஊனமாயிற்று.

*சரத் ஜயமான:* மிருசுவிலில் இடம்பெற்ற படுகொலைகளில் மரணமடைந்தவர்களில் அவரும் ஒருவரல்லவா?

சாட்சி: ஆம். (ஒ)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரான்ஸ் உதவ வேண்டுமெனக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.வைத்தியசாலையில் நவீன வசதிகள் கொண்ட கட்டடம் ஒன்றை அமைக்க பிரான்ஸ் உதவ வேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம் கோரியுள்ளார்.

யாழ்.வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர் றெனோல்ட் பிலோமியிடம் இக்கோரிக்கையை பணிப்பாளர் விடுத்தார்.

இந்தக் கட்டடத்தை அமைக்க 19 கோடி ரூபா தேவை என்றும் - இதனை அமைப்பதன் மூலம் குடாநாட்டு நோயாளர்களுக்கு மேலும் சிறந்த மருத்துவசேவைகளை வழங்கமுடியும் என்றும் -

பிரதி அமைச்சரிடம் தெரிவித்த பணிப்பாளர் அத்திட்டம் தொடர்பான ஆவணங்களையும் கையளித்தார்.

யாழ்ப்பாணம் வந்த பிரெஞ்சுப் பிரதி அமைச்சர் யாழ்.நூலகக் கட்டடத்துக்குச் சென்று அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு 800 புத்தகங்களையும் நூலகத்திற்கு வழங்கினார்.

அதன் பின்னர் புனரமைக்கப்படும் நூலகத்தையும் அவர் பார்வையிட்டார். அல்லைப் பிட்டியில் அமைக்கப்படவிருக்கும் வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல்லை பிரதி அமைச்சர் நாட்டினார். (ஒ-3-8-15-139)

**நாளை**

மாசி 02
வெள்ளிக்கிழமை
(14.02.2003)
திதி : துவாதசி
முற்பகல் 8.30 வரை
நட்சத்திரம: புநர்பூசம்
முன் இரவு 11.33 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 6.33 - 8.03
ராகுகாலம் : 11.03 - 12.33
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

இருந்தவர்களைப் பற்றி நல்லவற்றைப் பேசுங்கள். முடியாவிட்டால் எதுவும் கூறாது இருந்து விடுங்கள்.

இணைய வருபவர்களின்

# வயதை உறுதிப்படுத்தியபின்பே இயக்கத்தில் சேர்க்கிறோம்!

## அரசியற்றுறைப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

தமது வயது குறித்து தவறான தகவல்களை வழங்கி புலிகள் இயக்கத்தில் பல சிறுவர்கள் இணைய முயற்சிக்கின்றனர்.

ஆனால், இணையவருவோரின் பெற்றோர்கள்மூலமாக அவர்கள் 18 வயதைத் தாண்டியவர்கள் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே எமது அமைப்பில் உள்வாங்கிக்கொள்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பிரதிநிதி சு.ப.பிரவீன்ராஜ்.

புலிகள் இயக்கத்தில் இணைய வந்த சிறுவர்களை அவர்களது பெற்றோரிடம் கையளிக்கும் நிகழ்வு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பணிமனையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

எமது இயக்கத்தில் 18 வயதுக்குட்பட்டவர்களை இணைக்கக் கூடாது என்ற தேசியத் தலைவரின் கட்டளையை நாம் கடுமையாகப் பின்பற்றிவருகின்றோம் - என்றும் சு.ப.பிரவீன்ராஜ் குறிப்பிட்டார். (ஒ-9)

# விக்கிரகத் திருட்டு தொடர்பான சந்தேக நபர்களுக்கு பிணை மறுப்பு

வலி.வடக்கு,பெப்.13.

இந்து ஆலயங்களில் இடம்பெற்ற விக்கிரகத் திருட்டுக்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் பிணைமனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆறுபேரையும் பிணையில் விடும்படி கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

கன்னாகம் பொலீசார் அப்போது மன்றின் முன்னர் தோன்றி இது ஒரு சமயத்தை கடுமையாக நிந்தனை செய்த செயல். ஆகையினால் சந்தேகநபர்களை பிணையில் விடுவதை ஆட்சேபிப்பதாகத் தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் சந்தேக நபர்களை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிபதியினால் கட்டளையிடப்பட்டது.

இதேவேளை ஹற்றன், கொட்டகலையைச் சேர்ந்த புஸ்பராசா புஸ்பலிங்கம் என்பவருக்கு இவ்வாரம் திருமணம் நடைபெறவுள்ளதாகவும் - அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கும்படியும் கோரப்பட்ட போதிலும் மன்று அம்மனுவையும் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-8:6)

# மூண்ட பெருந் துயர் சுமந்து.....
# 31ஆம் நாள் நினைவலைகள்!

உருவாய் மண்ணில் 13 - 05 - 1928



வானுறையும் தெய்வத்துள் அமர்ந்த அன்னை

அருவாய் விண்ணில் 14 - 01 - 2003

# வீ.எம்.கணபதிப்பிள்ளை பராசக்தி
## அவர்கள்

திதி: வைகுந்த ஏகாதசி

### தைபிறந்தும் தாளாத் துயர்!

ஐயிரண்டு திங்களங்கம் சுமந்தாய் அம்மா! ~ எமை
அன்புநெஞ்சில் தோளிலிட்டு வளர்த்தாயம்மா!
கையிரண்டிற் காதல்கூர காத்தாய் அம்மா ~ இன்று
கதறியழ வைத்து எங்கு கலைந்தாய் அம்மா?
தையிருந்து வழிபிறக்கும் என்பார் அம்மா ~ இங்கு
தைபிறக்க தாய்நீயும் பறந்தாய் அம்மா!
மையிருளில் கசிந்துமனம் வாடினோம் அம்மா ~ இந்த
மாநிலத்தில் மகிழமீண்டும் வா! வா! அம்மா!

எம் அன்பு அன்னையின் ஆத்மசாந்திக்கு .. அகநெகிழும் அஞ்சலிகள்!

*டச்சு வீதி,*
*சாவகச்சேரி.*

**வீ.எம்.கே. குடும்பத்தினர்.**

(C/26464)

# சமாதானம், சுயகௌரவம், தன்னாட்சி இவற்றை உறுதிசெய்யும் தீர்வு தேவை!

## பிரான்ஸ் அமைச்சரிடம் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.13

சுய கௌரவத்துடனும், தன்னாட்சியுடனும், இனத் தனித்துவத்துடனும் கூடிய முழுமையான சமஷ்டி ஆட்சிக்கு உட்பட்டதாக இந்த மண்ணில் சமாதானம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மேற்கண்டவாறு பிரான்ஸ் நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் றெனால்ட் முசோலியிடம் தெரிவிததார்.

கடந்த திங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பிரதி வெளிவிவகார அமைச்சருடன் இடம்பெற்ற ஒரு மதியபோசன சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மதிப்புக்குரிய வெளிவிவகார அமைச்சர் அவர்கள் சில மணி நேரத்திற்கு முன்பு விஜயம் செய்த யாழ். பொது நூலகம் நான் ஆணையாளராகவிருந்த காலத்தில்தான் தாக்கியளிக்கப்பட்டது. இது எமது வரலாற்றில ஒரு ஆறாத காயம் என்பதை நீங்கள உணர்வீர்கள் என நம்புகிறேன.

இந்த மண்ணின் மக்கள் ஆகிய நாம் எப்பொழுதும் சமாதானத்தையே விரும்புகிறோம். ஆனால், அந்த சமாதானம் சுயகௌரவத்துடனும், தன்னாட்சியுடனும், இனத் தனித்துவத்துடனும கூடிய முழுமையான சமஷ்டி ஆட்சிக்குட்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்கவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை சமஷ்டி முறை என்பது ஒன்றும் புதிதல்ல. எமது தலைவர்களுள் ஒருவரான தந்தை செல்வநாயகம் அவர்கள் சமஷ்டி ஆட்சி முறை கோரி 1952ஆம ஆண்டிலேயே அரசியல் நடவடிககைகளில் ஈடுபட்டார். அரசியல் நடவடிக்கைகள் தோற்ற பின்பே 1976 இல் தனிநாட்டு கோரிக்கைக்கு அவர் தள்ளப்பட்டார். முழுத் தமிழினமும் தள்ளப்பட்டது.

இதையே ஆயுதப் போராட்டக் கொள்கையாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்து போராடிவருகிறது.

1987இல் இந்திய இராணுவம் இந்த மண்ணை ஆக்கிரமித்து நின்றபோது, யுத்தநிறுத்தம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும்பேசி, சுமுகத்தீர்வு காணவேண்டும என்றும, அவர்களே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் கூறினேன். பதினைந்து வருடங்களின பின்பு இந்தக கருத்து முக்கிய தமிழ்க் கட்சிகளால் ஏற்கப்பட்டு, இதையே அடிப்படைச் கொள்கையாக முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டு, மக்கள் ஆணையும் பெறப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் நோர்வே அனுசரணையுடனான அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் சமஷ்டி ஆட்சி முறையை பரிசீலிக்க ஒப்புக்கொண்ட சூழ்நிலையில் அரசும், ஜனாதிபதியும் சாதகமாக அணுகித் தீர்வு காணவேண்டும்.

எமக்குள்ள அச்சமெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தப் பேச்சுக்களுக்கு இடையூறு செய்து, முட்டுக்கட்டை போட்டு வருவது பற்றியதுதான். எம்மைப் பொறுத்தவரை அவரை வழிநடத்தக் கூடிய உலகின் முதன்மையான அரசும் நாடும் பிரான்ஸ தான் என நாம் திடமாக நம்புகிறோம. அவர்கள் தங்கள் நாட்டில் கல்வி பயின்றவர் என்பதால் தங்கள் நாட்டில் அபிமானம் கொண்டவர் என்பது தங்களுக்குத் தெரிந்ததே. இந்த விடயத்தில் தங்கள் நாட்டின் ஆதரவையும் செல்வாக்கு பிரயோகத்தையும் நாம் மிகவும் வேண்டிநிற்கிறோம். மீள் குடியமர்வைப் பொறுத்தவரை, புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு பின்பு பத்து பிரதேசங்கள் வரை உயர்பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. இவை நியாயபபடுத்தப் பட முடியாததவை.

கௌரவ பிரதி அமைச்சர் அவர்களை, தங்கள் நாட்டின் தங்களது சொந்த நகரத்தின் அல்லாது வேறு ஒரு இடத்தில் வாழசசொன்னால் நீங்களே சம்மதிக்கமாட்டீர்கள். அதுவே எமது இடம்பெயர்நதோரது நிலையும். அவர்கள் தமது சொந்த நிலத்தில் வாழ்ந்து தொழில் செய்ய அனுமதிக்கப்படல் வேண்டும் - என்றார் சிவஞானம்.

## வாய்க்கால்களில் வள்ளல்கொடி படர்கிறது

வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள பல விவசாய வாய்க்கால்களில் வள்ளல்கொடி படர்ந்துள்ளது.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள கொத்தலாவை வாய்க்கால்கள் தொடககம் அராலி கடற்கரை வரை செல்லும் வழுக்கையாற்று தொடர் வாய்க்கால முழுவதிலும் வள்ளல்கொடி படர்ந்துள்ளது.

வயல்வெளிகளில் படரும் இவற்றை களைகளுடன் சேர்த்து வாய்க்காலகளில் கொட்டுவதால் இவை அங்கு வளர்ந்து காணப்படுகின்றன.

வள்ளல் கொடியினை அழிப்பதற்குத் தேவையான மருந்து அடிபபதற்கு அதிக செலவு ஏற்படுகின்றது.

2001ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம போதிய நிதி இல்லாமையால் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட வில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக இச்செடியை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இருப்பினும் விவசாயிகளின் ஒததுழைப்பு இன்றி இவற்றைக் கட்டுப்படுத்துவது முடியாத செயல் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-152)

## வெண்ணப்புவவில் வீழ்ந்த மர்மப் பொருள் விண்கலப் பகுதியல்ல: எரிகல் சிதைவே!

### கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கருத்து

வெண்ணப்புவ, பண்டிருப்புவ பகுதியில் கடந்த வியாழக்கிழமை வானிலிருந்து விழுந்த மர்மப்பொருள் விண்கலம் ஒன்றின் பகுதியல்ல. எரிநட்சத்திரம் ஒன்றின் பகுதியாகவே இருக்க வாய்ப்பு உண்டு. இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் கொழும்பு பல்கலைக்கழக பௌதிகவியல் பீடத்தின் பேராசிரியர் சந்தன ஜெயரட்ண.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இந்த மர்மப்பொருள் பூமியில் விழுந்தபோது வெடித்துச் சிதறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு கல்ரக எரிநட்சத்திரத்தின் துண்டாகவே இருக்கலாம். உயர் அழுத்தம் காரணமாக வளிமண்டலத்துக்குள் அது நுழைந்த சமயம் வெடித்திருக்கிறது. அதில் கந்தகக் கலவை காணப்படுகிறது.

வியாழக் கிரகத்தில் இத்தகைய கற்கள் இருக்கக்கூடும் - என்றார் கொழும்பு பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியர். இது பற்றிய மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஒ)

## ‘அடிபணியோம்; அடிமையாகோம்’ என்ற புலிகளின் கொள்கையை உணர்த்தி வீரகாவியமாகிவிட்ட மாவீரர்கள்!

### அஞ்சலி நிகழ்வில் இளம்பரிதி உரை

யாழ்ப்பாணம்,பெப்.13

“அடிபணியோம்; நாங்கள் அடிமையாக இருக்கமாட்டோம்” எனும் விடுதலைப் புலிகளின் கொள்கையை நெடுந்தீவுக் கடலில் வீரகாவியமான மூன்று மாவீரர்களும் எதிரிக்கு உணர்த்தி தமிழர் மானம் காத்துள்ளனர்.

நெடுந்தீவுக் கடலில் வீரகாவியமான கப்டன் பொதிகைமாறனின் அஞ்சலி நிகழ்வு கடந்த திங்கள் பருத்தித்துறை பஸ்தரிப்பு நிலையத்தில் இடம்பெற்றபோது, அங்கு உரையாற்றிய இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் தமது உறுதியின்படி “அடிபணியோம்; நாங்கள் அடிமையாக இருக்கமாட்டோம்” என்ற கருப்பொருளை காத்து வருபவர்கள். இதனையே நெடுந்தீவுக் கடலில் வீரகாவியமான மேஜர் சுதன், கப்டன் அன்பன், கப்டன் பொதிகைமாறன் ஆகிய மூன்று மாவீரர்களும் உறுதிபட எதிரிக்கு விளக்கிச் சென்றுள்ளனர்.

எமது கடலில் நாம் பயணிக்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி நாம் ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குட்பட்ட கடற்பரப்பில் நடமாடமுடியாது. இதனை நாம் மீறவில்லை. ஆனால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்கு முன்னர் ஆயுதங்களுடன், துணிவுடன், உறுதியுடன் கடற்பரப்பில் உலாவினோம்.

இன்று எமது கடற்பரப்பிலேயே நிராயுதபாணிகளாக வந்த எமது போராளிகளை கடற்படை கைதுசெய்ய முற்பட்டது. இது இதுவரை கடலாதிக்க இறைமையைப் பாதுகாக்கப் போராடிய அந்த மூன்று கடற்படை மறவருக்கும் புலிகளின் தன்மானத் திறனும் இழுக்கான செயலாகத் தோன்றியதால் அவர்கள் தம்மை ஈழமண்ணில் விதைத்துச் சென்றுள்ளார்கள்.

தம்மை மாய்த்த வேளையில் கூட கண்காணிப்பாளர்களையும் வெளியேற்றிவிட்டு, கடற்படையினரையும் தாக்காது தம்மை மாய்த்துள்ளார்கள். உண்மையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்ற ஒன்று இருந்திராவிட்டால் நடந்திருப்பதேவேறு. எதிரியின் கடற்கலமே வெடித்திருக்கும். இதன்மூலம் தமிழ் இனத்துக்காக - தமிழர் எதிர்பார்க்கும தீர்விற்காக - தம்மால் எந்த இடையூறும் ஏற்பட்டு விடக்கூடாது என எண்ணியே அவர்கள் தம்மை மாய்த்துள்ளனர்.

இந்த விடயத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மிகுந்த அசிரத்தையை வெளிக்காட்டி உள்ளனர். அத்தோடு, உண்மைக்கு புறம்பான கருத்தையும் அவர்கள் கூறியுள்ளமை வருத்தத்திற்குரியதாகும்.

- எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய போராளி திருக்குமரன் தெரிவித்ததாவது:-

கடலில் வலிமைகொண்டு போராடிய எம்மவரைத் திட்டமிட்டே கடற்படையினரும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் மரணிக்கச் செய்துள்ளனர். இது விடுதலைப் புலிகளைச் சீண்டிப்பார்க்கும் செயலாகும் - என்றார்.

(ஒ-9-12)

## பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான விழிப்புணர்வு

# இலங்கை அதிகாரிகளுக்கு அமெரிக்கா பயிற்சியளிப்பு!

கொழும்பு,பெப்.13

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான பிரிவு, பேரழிவு ஆயுதங்கள் குறித்த கருத்தரங்கு ஒன்றை கடந்த திங்கள் இலங்கையில் ஆரம்பித்தது.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. இக்கருத்தரங்கு நாளை 14ஆம திகதி வரை நடைபெறும்.

பேரழிவு ஆயுதங்கள் சம்பந்தமான அறிமுகம், சம்பவம் நடந்த இடத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழிற்பாடுகள், சிகிச்சை முறைகள், பேரழிவு ஆயுத சம்பவத்தின்போது முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சிகள் இக் கருத்தரங்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பொலீஸார், இராணுவ அதிகாரிகள், அவசர சிகிச்சை சேவகர்கள், மாநகரசபை ஊழியர்கள் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சபையின் அடங்கிய 150 அதிகாரிகள் இந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொண்டனர்.

அமெரிக்க தூதுவர் ஆஷ்லி வில்ஸ இந்தப் பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்தார்.

பேரழிவு ஆயுதங்கள் மூலம் இலங்கை தாக்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக இந்தப் பயிற்சிநெறி வழங்கப்படவில்லை எனவும் - இது ஒரு நிகழ்ச்சித்திட்டமாக பல நாடுகளுக்கு வழங்கப்படும் பயிற்சி எனவும் - அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

(ஒ)

## கீரிமலையில் நீர்த்தாங்கி

வலி.வடக்கு,பெப்.13

கீரிமலை தீர்த்தக் கேணிக்கு அருகே சுமார் 4லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர்த் தாங்கி வலி. வடக்கு பிரதேச சபையிடம் இவ்வாரம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நீர்த் தாங்கியிலிருந்து ஆண்கள், பெண்கள் நீராடும் கேணிப்பகுதிகளுக்கும் மலசல கூடத்திற்கும், அந்தியேட்டி மடத்துக்கும் நீர் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கேணிப் பகுதியில் உள்ள குளியலறைகளில் கழிவுநீர் செல்ல அமைககப்பட்டிருந்த வடிகால்கள் தூர்ந்து போயுள்ளன. இந்நிலையில் அங்கு பொருத்தப்பட்டுள்ள குழாய்களைப் பயன்படுத்தினால் கழிவுநீர் கேணிக்குள செல்ல நேரிடும்.

இதன் காரணமாக அவற்றை உடன் பயன்படுத்த முடியாத நிலை எழுந்துள்ளது. பிரதேச சபையினர் வடிகால்களை துப்புரவு செய்த பின்னரே கேணிக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ள குழாய்களை பயன்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-86)

## ‘புலிகளின் குரல்’ வானொலியின் நேயர் மன்றங்கள் தெரிவு

கிளிநொச்சி,பெப்.13

‘புலிகளின் குரல்’ வானொலியின் பிரதேச வானொலி மன்றங்களின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் கூட்டங்கள் நேற்றுமுதல் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்றன.

முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, விசுவமடு, கிளிநொச்சி, அக்கராயன், மல்லாவி ஆகிய இடங்களில் இந்தக் கூட்டங்கள் இடம்பெறுகின்றன. அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள வானொலி மன்றங்களின் தற்போதைய நிர்வாகிகள், கலைஞர்கள், கவைஞர்கள், ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், புதிதாக நாளாந்தம் வானொலி கேட்போர் ஆகியோரை இக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் முதலாவது கூட்டம் இடம்பெற்றது.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்திலும் -

எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய மகாவித்தியாலயத்திலும் -

எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் -

எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலையிலும் -

எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு விசுவமடு மகா வித்தியாலயத்திலும் கூட்டங்கள் இடம் பெறவுள்ளன.

(ஐ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.13

நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு ஆனைப்பந்தி வேத சிவாகம குருகுல நிர்வாக உத்தியோகத்தர் சிவஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) ‘இந்துசமயக கிரியைகள்’ என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

இந்த நிகழ்வு இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(ஐ)

## கிருமிநாசினி பயன்படுத்தாமல் பயிர்ச்செய்கை வெற்றியளிப்பு

வலிகாமம் தெற்கு,பெப்.13

பண்டத்தரிப்பு, மாதகல், பெரியவிளான் போன்ற இடங்களில் இரசாயன கலவையோ, கிருமிநாசினிகளோ பயன்படுத்தப்படாமல் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை நல்ல வெற்றி கண்டிருப்பதாக கரிமலை சுமங்கல சேவை பயிர்ச்செய்கை போதனாசிரியை திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

கடந்த வருடம் இப்பகுதியில் செய்கை பண்ணப்பட்ட மிளகாய், வெங்காயம், புகையிலை, கரட் மற்றும் பீற்றூட் போன்ற பயிர்வகைகளுக்கு விவசாயிகள் கிருமிநாசினிகளை முற்றாகத் தவிர்த்து நல்ல விளைச்சலைப் பெற்றிருக்கிறார்கள்.

இரசாயன கலவையையோ, கிருமிநாசினிகளையோ பயன்படுத்தாமல் இயற்கைப் பசளைகளை உபயோகிப்பதால் பயிர்கள் செழித்து வளர்வதோடு, கூடியகாலம் நிலைத்திருந்து பயன்தருவதாக விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது.

குறிப்பாக மிளகாய்ச்செடிக்கு இயற்கைப் பசளைகளை தாம் உபயோகித்தமையால் மிளகாய் உற்பத்தி அதிகரித்திருந்ததாகவும் -

கூடியகாலம் அவை நிலைத்து நின்று பணம் தேட வழிவகுத்ததாகவும் -

இதனை முன் உதாரணமாகக் கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் அனைவரும் இரசாயனக் கலவைகளையும் செயற்கை கிருமிநாசினிகளையும் கைவிட்டு இயற்கையான பசளைகளையும் கிருமிநாசினிகளையும் பயன்படுத்த வேண்டுமெனவும் -

விவசாயிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர் - என்றார்.

(ஒ-152)

## திறமைகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம்

வடக்கு - கிழக்கு மாகாண பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக கப்பட்ட பிற சேவைகள், சிறாப்பர் சேவை, கணக்குப் பதிவுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை ஆகியவற் றின் வகுப்பு II 'அ' பிரிவுக்கும், சுருக் கெழுத்தாளர் சேவை தரம் II க்குமான வினைத் தடை திறமைகாண் பரீட் சைக்கான விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரின் உறுதிப் படுத்தலுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென துணைக்குழுவினால் சகல திணைக்களங்களுக்கும் சுற்ற றிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானில் நடைபெறும் பேச்சுக்களில் அரசியல் தீர்வு குறித்து பேச இணக்கம்

## நாடு திரும்பிய அமைச்சர் பீரிஸ் தகவல்

அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக் களின் போது அரசியல் தீர்வு குறித் துப் பேச அரசும் விடுதலைப் புலிக ளும் இணங்கியிருப்பதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தி ருக்கிறார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜப்பா னில் நடைபெறும் ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின் போது அர சியல் தீர்வு குறித்து பேச பேர்லினில் நடந்துமுடிந்த சமாதானப் பேச்சுக்களில் இனங்காணப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். சமாதானப் பேச்சுக் களில் அரசகுழுவுக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பீரிஸ் பேர்ளினி லிருந்து நாடு திரும்பிய பின்னர் இவற்றைத் தெரிவித்தார்.

"நாடு பிளவடையாமல் அதிகாரத் தைப் பரவலாக்குவது குறித்து ஜப் பானில் எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்படும். அதி காரப் பரவலாக்கலின் போது மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்குமிடையே நிதி விவகாரம் எவ்வாறு கையாளப் பட வேண்டும் என்பது குறித்தும் ஆரா யப்படும். நேற்றுமுன்தினம் காலை நாடு திரும்பிய அமைச்சர் பீரிஸ் விமான நிலையத்தில் செய்தியாளரைச சந்தித்தபோது இவ்வாறு கூறினார்.(ஓ)


## விற்பனைக்கு

11'x7' பாவித்த சுருக்குக் கதவு (தகடுடன்) உடன் விற்பனைக்கு உண்டு. விலை 18,000/=

தொடர்பு:-

இல.41, நாயன்மார் வீதி, நல்லூர். (14421)



# அறிவித்தல்

## M/S. A.M.T.TRANSPORT SERVICE

பருத்தித்துறை வீதி,
இருபாலை சந்தி, கோப்பாய்.
தொலைபேசி: 0777 - 788473/0777686220
தொலைநகல்: 342168
Email: amttranss@sltnet.lk

ஸ்தாபனத்தைப் பின்வரும் வாகனங்களின் விற்பனை முகவர்களாக வடமாகாணத்திற்கு நியமித்துள்ளோம் என்பதை யாழ்.வர்த்தகர்கள், விவசாயிகளுக்கு நாம் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

★டாட்டா கனரக வாகனம் (பேருந்துகள், பாரஊர்திகள் 250-350 வகைகள், ரிப்பர் வகைகள்).

★மகேந்திரா உழவு இயந்திரம், இவற்றிற்கான உதிரிப்பாகங்கள்.

**நிகழ்ச்சிகள்**

மேற்படி வாகன சம்பந்தமான தொழில்நுட்ப விளக்கஉரையும் வாகன கண்காட்சி நிகழ்ச்சியும் கலந்துரையாடலும் இடம்பெறும்.

இடம்: 431 கோவில் வீதி, நல்லூர் (கந்தன் கருணை)
காலம்: 22.02.2003 சனிக்கிழமை.
நேரம்: காலை 10.00 மணி

விவசாய பெருமக்கள், கனரக வாகன உரிமையாளர்கள், கொள்வனவாளர் களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

65, ஜெத்தவண வீதி,
கொழும்பு-14
தொலைபேசி: 449797 / 3328810 (சி-26499)

டீசல் மோட்டோர் என்ஜினியறிங் கம்பனி லிமிட்டெட்.


# 45ஆம் நாள் நினைவு தினம்

மலர்வு
13 - 12 - 1968



உதிர்வு
31 - 12 - 2002

## பொன்னன் ஞானேஸ்வரன்

(கராத்தே ஆசிரியர் - BLACK BELT DAN 2)

ஞாலத்தின் நாயகனே எங்கள் ஞானமே!
காலத்தின் விதியால் கடலில் கரைந்தாயே - உந்தன்
கோலத்தின் நிலையை மறக்குமா நெஞ்சம்?
மறவோம் மறவோம் என்றும் மறவோம்.


கராத்தே ஆசிரியரும், குத்துச்சண்டை, மல்யுத்தம், சிலம்பம், உடற்பயிற்சி வித்தகரும் ஆழ்கடலில் மீன்பிடிப்படகில் சென்றபோது, கடற்படைக் கப்பலால் மோதுண்டு உயிர் நீத்தவருமான எங்கள் குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கு மாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

காட்டுப்புலம்,
அரசடி,
தொண்டைமனாறு. (14422)

- பொன்னப்பா குடும்பத்தினர்.

# நெஞ்சுருகப் பாடும் நினைந்துருகல் ஓராண்டு

மண் உலகில்
10 - 10 - 1957



விண் உலகில்
24 - 02 - 2002

## செல்வி தம்பிஐயா சிவபூஷணி

திதி:- வளர்துவாதசி (13.02.2003)

எமக்காகவே பிறந்து
எமக்காகவே வாழ்ந்து
எம்மைக் காத்துநின்ற
எங்கள் தெய்வத்திற்கு
எம் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (14420)

பிரிவால் வாடி நிற்கும் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயசரஸ்வதி வைரமுத்து

(காரைநகர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர், நீலிப்பந்தனையை வதிவிடமாகவும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயசரஸ்வதி வைரமுத்து நேற்றுமுன்தினம் (11.02.2003) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் முன்னாள் சிலாபம் நல்லாயன் கன்னியர்மடம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் இளைப்பாறிய ஆங்கில ஆசிரியையும் காலஞ்சென்ற முன்னாள் மின்சார சபை கணக்காய்வாளர் சங்கரப்பிள்ளை வைரமுத்துவின் அன்பு மனை வியும் ஸ்ரீ சாரதாமணி, ஸ்ரீ லீலாமணி, ஸ்ரீ வசந்தாமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தா மற்றும் சிவதாஸ், உதயகு மார் ஆகியோரின் அன்பு மாமியாரும் கிஷாணி, சரண்யா, ரகுராம், ரம்பாலினா, அருண்மாக் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2003) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3, M Block, Government Flats,
Colombo - 04. (C/25498)

தகவல்: திருமதி S.S.ஸ்ரீஸ்கந்தா

## திருமதி பூரணம்மா சரவணமுத்து

(புத்தமேனி அச்சுவேலி)

திருமதி பூரணம்மா சரவணமுத்து அவர்கள் 03.02.2003 அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலையன் ஓய்வூதியர் சரவணமுத்துவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், மயில்வாகனம், காலஞ்சென்ற விக்னேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சிறாஞ்சலி, யோகிலமதி, கார்த்திகேயன் ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயராஜ், சுனிதா, சுபாதினி, ஜெகேஸ்வரன், துஸ்யந்தினி, ஸ்ரீகோணேஷ், மாதங்கி, சுபாங்கி, ஷிரோமி, ரோஷி ஆகியோரின் பேர்த்தியும வருண், அஜிலேஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 61/3, பெரேரா ஒழுங்கை, வெள்ளவத்தை இல்லத்தில் 15.02.2003 சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிறு காலை 7மணிக்கு கிரியைகள் நடைபெற்று 10மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/26495)

தகவல்: இ.கார்த்திகேசன் (மருமகன்)

# தகவல் தொழில்நுட்பப் பயிற்சியில் சாதனை படைத்துவரும் ஐ.ஐ.எஸ்.

கணனித் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதில் முன்னோடி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் ஐ.ஐ.எஸ். நிறுவனம் ஏழாவது நிறுவன தினம் மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தை அண்மையில் கொண்டாடியது.

1996ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வையடுத்து, எதிர்காலம் சூனியமாகி விடக்கூடிய நிலையில் இருந்த குடாநாட்டு மாணவ சமுதாயத்துக்கு நம்பிக்கையூட்டக்கூடியதாக இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் கடந்த 7வருடங்களில் யாழ். மண்ணிற்கு சுமார் 840 தகவல் தொழில்நுட்ப அறிவுசார் வல்லுநர்களை இந்த நிறுவனம் வழங்கியுள்ளதாக இதன் இயக்குநர் கே.விக்னேஷ் கூறுகின்றார்.

நிறுவன தின விழாவில் சான்றிதழ்களை வழங்கி அவர் உரையாற்றியபோது தெரிவித்ததாவது:-

இன்றைய சமாதானச் சூழலில் தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த பதவிகளை எமது மாணவர்கள் தட்டிச்செல்கிறார்கள். இல்லையேல் இச்சந்தர்ப்பங்கள் அனைத்தும் இவர்களுக்கு கைநழுவிப்போயிருக்கும். எமது மாணவர்கள் வகிக்க வேண்டிய பதவிகள் தெற்கிலிருந்து நிரப்பப்பட்டிருக்கும். தகவல் தொழில் நுட்பத் துறையில் கணனி மென்பொருள்களை உருவாக்கக்கூடியவளம், எமது தமிழ் மாணவர்களிடையே உள்ளது. எமது மாணவர்களிடையே இருக்கிற ஆர்வம், அணுகுமுறை, திறமை, கடினமான உழைப்பும் முயற்சியும் எமது மண்ணுக்கு தகவல்தொழில்நுட்பத்துறையில் ஒரு சிறந்த எதிர்காலத்தினை உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினை எமக்கு ஊட்டுக்கின்றது.

எமது திறமைமிகு மனித வளத்தினை முழுமையாகப் பயன்படுத்தி எமது எதிர்கால தாயகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பிலே தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பாரிய மாற்றத்தினைக் கொண்டுவர முடியும். எமது நிகழ்கால, எதிர்கால ஆட்சியாளர்களிடம் நாம் வேண்டிக்கொள்வது தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த அமைப்புக்களுக்கு ஊக்கமளியுங்கள், சந்தர்ப்பத்தைத் தாருங்கள் என பதேயாகும்.

தகவல் தொழில்நுட்பத்தினை முழுமையாகப் பயன்படுத்தி தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஒரு பொருளாதாரக்கட்டமைப்பு உருவாக்கப்படுமேயானால் அந்தப் பொருளாதாரக் கட்டமைப்பு எமக்கு மிகப் பொருத்தமானதாகவும், ஒரு நீண்ட, ஸ்திரமான பொருளாதாரக் கொள்கையாகவும் இருக்கமுடியும். எமது அனைத்து வளங்களும் தகவல் தொழில்நுட்பத்தின் பக்கம் திருப்பிவிடப்படுமேயானால் தகவல் தொழில்நுட்பத் துறையில் தெற்காசியாவில் ஒரு முக்கிய இடத்தினை குறுகிய காலத்தில் அடைய முடியும். "ஒன்றுபட்டால உண்டு வாழ்வு" என்ற பழமொழிக்கமைய யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற அனைத்துத் தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த நிறுவனங்களும் எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும். எமது சுயமான சிந்தனைகள், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தக்கூடிய எமக்கிடையே ஒரு பலமான அமைப்பினை தோற்றுவிப்பதனூடாக எதிர்காலத்தில் நிறைய விடயங்களை நாம் சாதிக்க முடியும் என நான் நம்புகிறேன்.

இவ்வாண்டு இரண்டு பயனுள்ள திட்டங்களினை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் இணையத்தின் முழுமையான பயன்பாட்டினை எமது மக்கள் அனுபவிக்கக்கூடிய வகையில் இணையச்சேவை வழங்குநர்களாக வரத் திட்டமிட்டுள்ளோம்.

எமது மாணவர்களிற்கு அங்கீகரிக்கப்பட்ட பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களின் பட்டக்கல்வியை குறைந்த செலவில் இங்கு மேற்கொள்ளக்கூடிய வகையில் சந்தர்ப்பங்களை அமைத்துக்கொடுக்கவும் தீர்மானித்துள்ளோம் - என்று அவர் கூறினார்.

# சர்வதேச கணக்காய்வு நிறுவன சேவைகள் இங்கு மீண்டும் ஆரம்பம்

உலக அளவில் பிரபலமான 4 நிறுவனங்கள் (Big Four) எனப் பெயர் பெற்ற சர்வதேச கணக்காய்வு நிறுவனங்களில் ஒன்றான 'கே.பி.எம்.ஜி.' நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது சேவைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கையில் கே.பி.எம்.ஜி. போர்ட், நோட்ஸ் தோண்ரன் & கோ என்ற




பெயரில் இயங்கும் இந்நிறுவனம், தனது துறையில் இந்நாட்டின் முன்னணி நிறுவனமாகும்.

இந்நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது கிளை அலுவலகத்தினை நல்லூர் - பருத்தித்துறை வீதியில செயற்படுத்திவருகிறது. இதன்மூலம் சர்வதேச தரமுடைய கணக்கியல், கணக்காய்வு, வரி ஆலோசனை மற்றும் நிதியியல் நிபுணத்துவ சேவைகள் யாழ். மாவட்ட தொழிலதிபர்களுக்கும் வர்த்தக சமூகத்தினருக்கும் கிடைத்திட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிறுவனம் கடந்த எண்பதுகள் வரை தமது சேவையினை யாழ்ப்பாணத்தில் ஆற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது. கே.பி.எம்.ஜி. நிறுவனம், உலகளாவிய ரீதியில் 850 இற்கு மேற்பட்ட நகரங்களில் சுமார் ஒரு லட்சம் நிபுணர்களை உள்ளடக்கிய சேவை வலைப் பின்னல் ஊடாக கணக்கியல் சேவைகளை வழங்கி வருகிறது.

(ஒ)




ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் நிறுவனதினம் மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

# நுளம்புகளை ஒழிப்போம்; டெங்கைத் தடுப்போம்!

தென்னிலங்கையில் மிகவேகமாக பரவிவரும் டெங்குக் காய்ச்சல் தற்போது யாழ்ப்பாணத்தில் பரவ ஆரம்பித்துவிட்டது.

டெங்கு காய்ச்சல் வைரசினால் ஏற்படுகின்றது. இந்த வைரஸ் கிருமி ஈடிஸ் இன நுளம்பால் பரப்பப்படுகிறது.

இந்நுளம்பானது சாதாரணமாக காலை 6மணிக்கும் 8மணிக்கும் இடையிலும் மாலை 4மணிக்கும் 7 மணிக்கும் இடையிலும் அதிகம் காணப்படும். இந்த நுளம்பு நோயுள்ள ஒருவரைக் கடித்து குருதியை உறிஞ்சும்போது வைரஸ் கிருமியை உள்ளெடுத்துப் பின் சுகதேகி ஒருவரைக் கடிக்கும்போது டெங்கு வைரஸ் கிருமியை ஏற்றி நோயைப் பரப்புகிறது. இந்நுளம்பானது வீட்டின் உள்முறைகளில் காணப்படுவதால் இவற்றை அகற்றுதல் கடினமான விடயமாகும்.

டெங்குக் காய்ச்சலானது பலதரப்பட்ட நிலைகளில் வெளிக்காட்டப்படுகின்றது.

அவையாவன

★ காய்ச்சல்

★ குருதிப்பெருக்குடன் கூடிய காய்ச்சல்.

★ டெங்கு அதிர்ச்சிநிலை.

டெங்குக் காய்ச்சல் கிருமி நுளம்பால் உட்புகுத்தப்பட்டு சிலில் டெங்கு காய்ச்சலை மட்டும் ஏற்படுத்தும். இது ஆபத்துக் குறைந்தது. ஆனால் சிலரின் உடலில் டெங்கு காய்ச்சல் கிருமி முதல்தடவையிலேயே குருதிப் பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சலையோ அல்லது டெங்கு அதிர்ச்சி நிலையையோ உருவாக்குகின்றது.

இ.சுரேந்திரகுமார்
சமுதாய மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஆனால், பெரும்பாலானோரின் உடலில் இரண்டாம்முறை தாக்கத்தினால் குருதிப்பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல் அல்லது டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படுகின்றது.

### டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள்

காய்ச்சல், கடுமையான தலையிடி, கண்ணிற்குப் பின்னால் நோ. தசைநார் மூட்டுக்களில் நோ, உடலில் பல இடங்களில் தோலில்கீழ் சிவந்த புள்ளிகள் என்பனவாகும்.

### குருதிப்பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள்


மூக்கால் குருதி வெளியேறல், குடல்மூலம் குருதி வெளியேறல், முரசால் குருதி வெளியேறல், சிறுநீர், மலம் மூலம் குருதி வெளியேறல், மாதவிடாயின்போது கூடுதலான குருதி வெளியேறல்.

பெரும்பாலும் சிறார்களில் காய்ச்சல் ஏற்பட்டு 3முதல் 7நாள்கள் வரை காய்ச்சலும் பின்னர் காய்ச்சல் குறைந்து சிறிது முன்னேற்றம் காண்பதுபோல் தோற்றப்பாடும் ஏற்படும். பின்னர் நிலைமை மோசமாகி "டெங்கு அதிர்ச்சிநிலை" எனும் நிலை ஏற்படும்.

இதன்போது,

மேல் குளிருதல், வாயைச்சுற்றி நீலநிறமாதல், பதகளிப்பும் குழப்பமான நிலையும் ஏற்படல், நாடித் துடிப்பு வீதம், குருதியமுக்கம் குறைதல் என்பன அறிகுறிகளாகத் தெரியும்.

இந்நிலையில் குருதி கடத்தப்படும் குழாய்களில் இருந்து குருதி பாய்மம் வெளியேறிச் செல்லும் இதனால் அதிதீவிர சிகிச்சை இந்நேரத்தில் தேவை. இந்நிலையானது 12-24 மணித்தியாலங்களுக்குக் காணப்படும். இதன்பின்னர் குருதிக் கலன்களுக்கு மீண்டும் பாய்மம் உள்வரத் தொடங்கும். இக்காலப்பகுதி மிகவும் ஆபத்தானது. இதில் தகுந்த சிகிச்சை அளிக்காவிடின் இறப்பு நிச்சயம்.




### தடுப்பு முறைகள்

நுளம்புகள் தண்ணீரில் முட்டை இடுகின்றன. ஆகவே நீர் தேங்கும் இடங்களில் நீர் தேங்காதவாறு முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும. பின்வரும் இடங்கள் நுளம்பு பெருக வாய்ப்பான இடங்களாகும்.

- நீர்தேங்கும் சிறு குட்டைகள்
- மூடப்படாது நீர் சேகரிக்கப்படும் இடங்கள்
- வீட்டிற்கு வெளியே வீசப்பட்டுள்ள பாத்திரங்கள், ரின்கள், பானைகள், சிரட்டைகள், ரயர்கள்.
- நீருள்ள பூச்சாடிகள்.
- மழைநீர் தேங்கியுள்ள தாழ்வாரப் பீலிகள்.
- கைவிடப்பட்ட பாவனையற்ற கிணறுகள், நீர் நிறைந்த மரப்பொந்துகள்.

இவற்றை இயன்றளவு மக்கள் தமது சுற்றாடலில் இல்லாது செய்தல் வேண்டும். ஆனால், இவற்றினை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டியவர்கள் உள்ளூராட்சி சபைகளும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் அவர் சார்ந்த குழுவினரும். ஆனால், இந்நோய் பரவுவதாக தெரிந்த பின்னரும் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என பது கவலைக்குரிய ஒன்றாகவே இருந்து வருகிறது.

### தனிநபர் பாதுகாப்பு

நுளம்புவலை, நுளம்புச்சுருள், புல்லெண்ணெய் பாவித்தல். வீடுகளின் யன்னல் கதவுகளுக்கு நுளம்புகள் புகமுடியாதவாறு வலை அடித்தல், நீளமான உடைகள், காலுறைகள் அணிதல் போன்ற முறைகளை வீடுகளில் மேற்கொள்வதும் டெங்குக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளாகும்.

டெங்கு அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய உதவியை நாடுவதும் நோயாளிக்குப் பூரண ஓய்வு கொடுத்தலும், இலகுவில் சமிபாடடையக்கூடிய போசாக்கான உணவு கொடுத்தலும், வைத்திய ஆலோசனையின்றி மருந்துகள் எடுப்பதைத் தவிர்த்தலும் நோயாளிகள் மேற்கொள்ள வேண்டியவையாகும்.

✲

# சாயி சிந்தனை

## உடல் எனும் வாகனம்

வாகனத்தைச் செலுத்துபவருக்கு அதனைக் கட்டுப்படுத்தத் தெரிய வேண்டும். அவரது வாகனத்தின் மேல் அவருக்கு கட்டுப்பாடு இல்லை என்றால் நிச்சயம் விபத்துக்கு ஆளாவார். எமது உடலை ஒரு காந்தசக்தி மிகுந்த வாகனத்துக்கு ஒப்பிடலாம்.கண்கள் தான் முகப்பு விளக்குகள். வாய்தான் ஒலி எழுப்பும் ஹோர்ன். மனம் தான் ஸ்டீயரிங். வயிறுதான் எரிபொருள்தாங்கி நான்கு புருஷார்த்தங்களான தர்ம, அர்த்த, காம, மோக்ஷ ஆகியவையே நான்கு சக்கரங்கள். இந்தச் சக்கரங்களில் நம்பிக்கை என்ற காற்றை ஏற்றுங்கள். முன்பக்கச் சக்கரங்களில் ஏற்றப்படும் காற்றின் அழுத்தத்தைவிட பின்பக்கச் சக்கரங்களில் காற்றழுத்தம் அதிகமாக இருக்கும்.வயிற்றுக்கு அளிக்கப்படும் உணவு என்ற எரிபொருள் சுத்தமானதாக, புனிதமானதாக இருக்கவேண்டும். எரிபொருள் தூய்மையானதாக இருக்காவிட்டால் அடைப்பு ஏற்படும். ஆகையால், ஸாத்வீக உணவே உடமபிற்குச் சிறந்தது. நாம் குடிக்கும் தண்ணீர் சுத்தமானதாக, மாசற்றதாக இருக்கவேண்டும். அப்போதுதான் உடலென்ற இந்த வாகனம் நல்ல நிலையில் இருக்கும். சென்றடைய வேண்டிய இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும். இந்த தேக தத்துவத்தைப் புரிந்துகொண்டால் மட்டுமே நாம் பிறவி எடுத்த பயனை அடையமுடியும்.

(ஆதாரம்:-சனாதனசாரதி)



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் நடத்தப்படும் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலைய ஆரம்ப விழா அண்மையில் காரைநகர் களபூமியில் நடைபெற்றது.

பயிற்சி நிலையத்தை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-73)

# சிமென்ஸின் அதிரடி...

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றி எழுதினார். அவர் வரும் போது 86 ஓட்டங்களுக்குள் 4 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து திணறிக்கொண்டிருந்தது ஆஸ்திரேலியா. சிமென்ஸ், அணியை தூக்கி நிறுத்தியது மட்டுமல்ல வெற்றிக்கும் வழிவகுத்தார்.

அவர் வரும் வரையில் பாகிஸ்தானின் ஆட்டத்தில் பிரகாசம் தெரிந்தது. பின்னர் சோபை இழந்தது. 5 ஆவது விக்கெட்டுக்காக பொன்ரிங்கும் சிமென்ஸும் 60 ஓட்டங்களைப் பெற்றனர். பொன்ரிங் இடையிடையே வெகு அழகாக பௌண்டரிகளை விளாசினார். அணி 146 ஓட்டங்களைப் பெற்றபோது பொன்ரிங் ஆட்டமிழந்தார். 'ராவல்பின்டி எக்ஸ்பிரஸ்' சொஹைப் அக்தரின் பந்தில் தௌபீக் உமரிடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழந்தார். 67 பந்துகளில் 7 பௌண்டரிகள் உட்பட 53 ஓட்டங்களைக் குவித்திருந்தார் அவர். மறுமுனையில் ஆஸியின் நம்பிக்கை நட்சத்திரமாக நின்றாடினார் சிமென்ஸ். அவருடன் இணைந்தவர் ஹொக். 22 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்ற அவரை அழகாக 'ரன் அவுட்' செய்தனர் யூனுஸ் கானும் ரஷீத் லத்தீப்பும். தொடர்ந்து வந்த ஹார்வி. 19 பந்துகளில் 3 பௌண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களை விளாசினார். மறுபுறத்தில் சிமென்ஸும் விளாச எண்ணிக்கை திடீரென எகிறத் தொடங்கியது. அடுத்து வந்த லீ, 2 ஓட்டங்களை மட்டும் பெற்று, வக்காரின் பந்தில் 'அவுட்'டானார். ஆஸி. அணி அப்போது 292 ஓட்டங்களைக் குவித்திருந்தது. சிமென்ஸ் தனது சதத்தைக குவித்திருந்தார். அதன்மூலம் பாகிஸ்தானின் கனவைச் சிதைத்தார். ஆஸ்திரேலியாவின் கடைசிப் 10 ஓவர்களில் 100இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்தனர். சிமென்ஸ் 125 பந்துகளில் 143 ஓட்டங்களை விளாசிக் குவித்தார். அவற்றில் 18 பௌண்டரிகளும் 2 சிக்ஸர்களும் அடக்கம். இறுதியில் 310 என்ற மிகப்பெரிய இலக்கை பாகிஸ்தானுக்கு நிர்ணயித்தது ஆஸ்திரேலியா.

பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான், ஆரம்பம் முதலே திணற ஆரம்பித்தது. ஆரம்ப அதிரடி ஆட்டக்காரர் அப்ரிடி ஓர் ஓட்டம் எடுத்த நிலையில், ஜிலெஸ்பியால் வெளியேற்றப்பட்டார். ஆரம்பம் முதலே பாகிஸ்தானின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் சரிய ஆரம்பித்தன. 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது விக்கெட்டை இழந்தது பாகிஸ்தான். அடுத்து வந்த சலீம் எலாகி விரைவாக ஆடினார். அவர் 40 பந்துகளில் 3பௌண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைக் குவித்தார். ஹார்வியின் பந்தில் லீயிடம் பிடிகொடுத்து வெளியேறினார். இன்ஸமாம் உல்ஹக் - பாகிஸ்தானின் தூண் - வெறும் ஆறே ஓட்டங்களுக்கு வேகப்புயல் மெக்ராத்தின் பந்தில் வீழ்ந்தார். யுகானா (27), யூனுஸ் கான் (19), அப்துர் ரஸாக் (25) என்று பாகிஸ்தானின் நடுவரிசை ஆட்டக்காரர்கள் எவரும் அணியைத் தூக்கி நிறுத்தவில்லை. 147 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து பரிதவித்துக்கொண்டிருந்தது பாகிஸ்தான். அதற்கு இப்போது தேவை யாராவது ஓர் ஆபத்பாந்தகன் ஆனால், யாரும் அப்படிக் கிடைக்கவில்லை.

பாகிஸ்தானால் பழிதீர்க்க முடியாது என்று நினைத்திருந்தபோது ஜோடி சேர்ந்தனர் விக்கெட் காப்பாளர் லத்தீப்பும் முன்னாள் தலைவர் அக்ரமும். திடீரென இவர்கள் இருவரும் ஆஸி. பந்துவீச்சாளர்களின் பந்துகளை அடித்து நொறுக்க ஆரம்பித்தனர். பௌண்டரிகளும் சிக்ஸர்களும் பறந்தன. திடீர் வேகங்கொண்டது பாகிஸ்தானின் 'ஸ்கோர் போர்ட்'. 23 பந்துகளில் ஒரு பௌண்டரி, 3 சிக்ஸர்கள் விளாசினார் லத்தீப். 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மறுபுறத்தில் அக்ரம் 31 பந்துகளில் 4 பௌண்டரிகள், ஒரு சிக்ஸ் அடங்கலாக 33 ஓட்டங்களை விளாசிக் குவித்தார். 223 ஓட்டத்தை அணி பெற்றபோது அவரும் ஆட்டமிழந்தார். அடுத்த மூன்று ஓட்டங்களுக்குள் தனது கடைசி விக்கெட்டையும் இழந்தது பாகிஸ்தான். 44.3 ஓவர்களில் அதனால் பெறமுடிந்தது 228 ஓட்டங்களை மட்டுமே. பழி தீர்க்காமலேயே வெளியேறியது பாகிஸ்தான்.

-கனிமொழி.

மானிப்பாய்ச் சம்பவம்

# ஈ.பி.டி.பிக்கு தொடர்பில்லை மறுக்கின்றார் ஜெகன்

யாழ்ப்பாணம்,பெப்.13

மானிப்பாயில் புலிகள் இயக்கப் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது சம்பவத்தோடு எங்களைத் தொடர்பு படுத்தி குற்றம் சுமத்துவது அபாண்டமானது.

ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) இவ்வாறு தெரிவித்தார்.

"நேற்றுக் கட்சியின் தலைமையகத்தில் கட்சி ஆதரவாளர்களுடனான முக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் கட்சியின் பிரதேச மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் 200 க்கும் மேற்பட்ட ஆதரவாளர்களும் அங்கு வந்திருந்தனர்.

சம்பவம் நடைபெற்ற மானிப்பாய்ப் பிரதேசத்தில் அச்சமயம் ஓர் உறுப்பினர் மட்டுமே தங்கியிருந்தார். அவரும் தாக்கப்பட்டதாக அறிந்தோம்" - என்று ஜெகன் தெரிவித்தார். (ஐ)

# சமாதான முயற்சிக்கு உதவ அகாஷி மீண்டும் வருகை; இன்று திருமலை விஜயம்

## பிரதமரையும் சந்தித்துப் பேசுவார்

கொழும்பு,பெப்.13

இலங்கை அரசின் சமாதான முயற்சி தொடர்பாக ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி நேற்று மீண்டும் இலங்கை வந்து சேர்ந்தார்.

அவர் இங்கு தங்கியிருக்கையில் ஜனாதிபதி சந்திரிகாவையும், பிரதமர் ரணிலையும் சந்தித்து உரையாடுவார்.

திருகோணமலை மாவட்டத்துக்கான மனிதாபிமான உதவி, மீள்குடியேற்றம் குறித்து இன்று திருகோணமலையில் நடைபெறும் கூட்டத்திலும் அவர் பங்குபற்றுவார்.

இக்கூட்டத்தின்போது விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சிலரையும் அகாஷி சந்திப்பார் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்து கலந்துரையாட விரும்பியதாக அவர் நேற்று விமானநிலையத்தில் நிருபர்களிடம் கூறினார். அகாஷி இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும். (எ)

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

**தினம் ஒரு பரிசு - 06**

நாளை (14.02.2003) இடம்பெறவுள்ள இலங்கை - பங்களாதேஷ் ஆட்டத்தின் ஆட்டநாயகன் யார்?

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (14.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 06, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................

3. .................... 4. ....................

5. .................... 6. ....................


உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................






**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணன்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**

Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு லுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா; அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்? (..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................

காவேரி சில்க்ஸில்

இன்னும் சில வாரங்கள் மட்டும்

விசேட தள்ளுபடி விற்பனை

நீடிக்கப் பட்டுள்ளது

மலிவு விற்பனை

★ சல்வார்
★ பஞ்சாபி
★ சாறிகள்
★ ஸ்கேட்
★ பிளவ்ஸ்
★ T. சேட்
★ BOX சேட்
★ சீத்தை
இன்னும் பல

காவேரி சில்க்ஸ்
மலிவு விற்பனை அகம்
77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(C/26505)


## விவசாய தொழிலாளர் பற்றாக்குறை

வலி.தென்மேற்கு பகுதியில் கால போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் அரிவு வெட்டுதல், சூடு அடித்தல் ஆகிய வேலைகளுக்கு தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. (ஓ-135)


ராஜா யாழ்ப்பாணம்
4 ஆவது வாரமாக...
விஜய், ஸ்நேகா, வடிவேல், மணிவண்ணன்
வசீகரா
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30
(C-26291)



நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், குஷ்பு, மீனா, கபாலி
நடித்த
நாட்டாமை
(மீள்வ)
காட்சிகள்
தினசரி: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(14424)



நிறைஞ்சனாஸ் சங்கானை
மாதவன், மீராஜஸ்மின் நடித்த
ரன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
THE MUMMY RETURNS
(C-26291)


## மாதகல் லூர்து அன்னை பெருவிழா

மாதகல் லூர்து அன்னையின் வருடாந்தப் பெருவிழா இம்மாதம் 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இவ்விழா 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவுறும்.

15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறும் தேர்ப்பவனியைத் தொடர்ந்து நற்கருணை விழாத் திருப்பலி நடைபெறும். 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலி இடம்பெறும். அன்னையின் வழிபாடுகளில் பக்தி உணர்வோடு பங்குபற்றவும். அன்னையின் ஆலயத்தில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி நடமாட அனுமதி பெறப்பட்டுள்ளது.

(14428) - ஆலய நிர்வாகம்.

உ
ஓம் கணபதி துணை

## யா/இணுவில் இந்துக் கல்லூரி

### வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2003

**ஆரம்ப பிரிவு (1-5)**

காலம் : இன்று (13-02-2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணி.
இடம் : கல்லூரி மைதானம்
தலைமை : திரு.க.தணிகாசலம் அவர்கள் (கனிஷ்ட அதிபர்)
பிரதம விருந்தினர் : திருமதி இராஜபூபதி சோமசுந்தரம் அவர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/இணுவில் இந்துக் கல்லூரி)

**இடைநிலைப் பிரிவு (6-13)**

காலம் : நாளை (14-02-2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி.
தலைவர் : திரு.செ.குபேரநாதன் அவர்கள் (அதிபர்)
பிரதம விருந்தினர் : திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் (தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி - நாடாளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில்,
சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்.

வாழ்த்துக் கூறும்:
யா/இணுவில் இந்துக் கல்லூரியின் கல்வி வளர்ச்சி மேன்மேலும் மேம்பாடடைய உளமார வாழ்த்துகின்றேன்.
கல்லூரியின் பழைய மாணவன்
கிருஷ்ணசாமி சிவகுமார்.
(14426)

## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன பாதுகாப்பு அதிகாரி
திரு.க.தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மைத்துனர்

### இராஜதுரை ஜீவரட்ணம்

அவர்கள் 11.02.2003 இல் திருகோணமலையில் காலமாகியதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். இல.44, கந்தசுவாமி கோவில் றோட், திருகோணமலையில் வசிக்கின்ற அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை சீமெந்துக்
கூட்டுத்தாபனம். (C/26507)
பாதுகாப்பு சார்ஜன்ட்
மற்றும் உத்தியோகத்தர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவரான
டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம்
மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளரான
சி.இளம்பிறைநாதன் ஆகியோரின்
பாசமிகு தந்தையாரான ஓய்வுபெற்ற ஆசிரியர்

### சுந்தரம் சின்னத்தம்பி அவர்களின்

மறைவினால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

29, கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (14437)
அறவழிப் போராட்டக்குழு,
NVDAG.

## கண்ணீர் அஞ்சலி

லயன் டாக்டர் S.S. அருளானந்தம் (J.P.), திருவாளர் இளம்பிறைநாதன் (உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி வடவலயம்)
ஆகியோரின் தந்தையார்

### அமரர் சுந்தரம் சின்னத்தம்பி

*(இளைப்பாறிய அதிபர்)*

அவர்களின் மறைவையொட்டி எனது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றேன்.

வைத்தமிழ் வெதுப்பகம்.
சாவகச்சேரி. (14436)
பீ.என்.சற்குணராசா.

## கண்ணீர் அஞ்சலி



### இராசையா இரத்தினகோபாலு

*(முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி)*

கரணவாய் கிழக்கைச் சேர்ந்தவரும், இலங்கை வங்கி திருநெல்வேலி கிளை முகாமையாளருமான இராசையா இரத்தினகோபாலு அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இலங்கை வங்கி.
திருநெல்வேலி. (14434)
உத்தியோகத்தர்,
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### இராசையா இரத்தினகோபாலு

*(முகாமையாளர், இலங்கை வங்கி - திருநெல்வேலி)*

பிருந்தாவனம், கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த இலங்கை வங்கி திருநெல்வேலி கிளை முகாமையாளர் இராசையா இரத்தினகோபாலு அவர்கள் நேற்று (12.02.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பிருந்தாவனம்'*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (14433)

தகவல்:
திருமதி பத்மாசினி இரத்தினகோபாலு
(மனைவி)

### சுந்தரம் சின்னத்தம்பி மாஸ்ரர் (மந்துவில்)

*(புராணிகர், முன்னாள் அங்கத்தவர், வரணி கிராமசபை)*

மந்துவிலைச் சேர்ந்த சுந்தரம் சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் நேற்று (12.02.2003) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் லயன் டாக்டர் அருளானந்தம் (J.P.), இளம்பிறைநாதன் (உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி, வடவலயம்), தேவமலர், யோகராசமலர் (ஆசிரியை), பொற்கிளி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவயோகம் (ஆசிரியை, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்), கங்கேஸ்வரி, சபாபதிப்பிள்ளை (கணக்காளர், SVS சாவகச்சேரி), சண்முகலிங்கம் (இளைப்பாறிய T.O.), ஜேம்ஸ் ஏபிரகாம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் டாக்டர் அன்னவதனி (உதவி விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), சுந்தரவதனி (விவசாயபீடம், யாழ்பல்கலைக்கழகம்), கஜவதன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), கோபினாத் (லண்டன்), கோபிகா (மாணவி, பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர்மடம்), உலகநாதபிள்ளை, தேவராணி (ஆசிரியை, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி), தீபா (சமுர்த்தி உத்தியோகத்தர், சாவகச்சேரி), கபிலன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), நூபா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2003) வியாழக்கிழமை இல.45, ஆடியபாதம் வீதி, கொக்குவிலில உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிரந்தர முகவரி:
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*45, ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
லயன் டாக்டர் அருளானந்தம்,
இளம்பிறைநாதன்
(AGM, மக்கள்வங்கி வடவலயம்)
(14435)

### வீரகத்திப்பிள்ளை வல்லிபுரம்

*(வல்லிபுர வாத்தியார்)*

தாளங்குளி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை வல்லிபுரம் நேற்று (12.02.2003) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - பத்தினி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராமாத்தை தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகம்மாவின் (கனடா) அன்புக் கணவரும் யோகேஸ்வரன் (ஓமான்), யோகராணி (கனடா), பாலகுமார் (கனடா), யோகநாதன் (கனடா), வானதி (லண்டன்), வாகீசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியத்தின் (கனடா) சகோதரரும் சோபனாதேவி (இந்தியா), சித்திரசேனா (கனடா), சசிரேகா (கனடா), பாமதி (கனடா), சாந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தன், நிதர்சனா, நிதர்சிகா, நிஜயந்தன் (இந்தியா), பிரசாந்தன், றக்சனா (கனடா), கிருஷாந்தன், அனுசாந்தன் (கனடா), நிறோஜனா, அனோஜனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2003 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

(C/26508)
தகவல்:
குடும்பத்தினர்.

### மயிலு சின்னத்துரை

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்போது இணுவில் கிழக்கில் வசித்து வந்தவருமாகிய மயிலு சின்னத்துரை அவர்கள் நேற்று (12.02.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காமாட்சியின் அன்புக் கணவரும் சரோஜினி, இராஜேஸ்வரி (ஆசிரியை, கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி (அஞ்சலகம் காங்கேசன்துறை), சிவானந்தம் (சுபாஜினி ஸ்டோர்ஸ் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனும் மயூரன், திருமால், ரஞ்ஜீவ், கிருபாலினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2003) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கோக்கன்வளவு"*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (14429)

தகவல்:
க.கந்தசாமி,
சி.சிவானந்தம்.
(மருமக்கள்)

# படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெண் போராளிகளைத் தாக்கியதன மூலம் எம்மை ஆத்திரமூட்டும் செயலில படையினர் ஈடுபட்டுள்ளனர். எமது போராளிகள் சுதந்திரமாக நடமாட பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். இனிமேல் இத்தகைய சம்பவங்கள் நடைபெற இடமளிக்கப்படமாட்டாது என்ற உறுதியை கண்காணிப்புக் குழு வழங்கவேண்டும் என்று இளம்பரிதி கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளித்த புரண்டம் மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி விடுதலைப்புலி உறுப்பினர்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதை நாம் உறுதி செய்துள்ளோம். இங்கு நடந்த சம்பவம் போன்ற சம்பவம் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மானிப்பாயில் உள்ள படைஅதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்து பேசுவதிலும் பார்க்க உயர் மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிரந்தர தீர்வு ஒன்றைப பெறலாம் என நம்புகிறேன் - என்றார்.

அங்கு கூடிய மக்கள் இது போன்ற தாக்குதல்கள் சாதாரண பெண்கள் மீதும் நடக்கக்கூடிய சாத்தியமிருப்பதால இது குறித்து உடனடித்தீர்வு காணப்படவேண்டுமென்று கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தனர்.

நேற்று பெண் போராளிகள் தாக்கப்பட்டபின்னர் அப்பகுதிக்கு விரைந்து சென்ற கண்காணிப்புக் குழுவின் யாழ். அதிகாரி அப்பகுதியில் தங்கிநின்ற சமயம் அவர் முன்னிலையில் பொது மக்கள் பலர் படையினரால் தாக்கப்பட்டிருக்கின்றனர். இதனை அவர் நேரில் கண்டுள்ளார். (ஐ-3-8-9)

# போருக்கு எம்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது. இது இராணுவ உபகரணமோ அல்லது இராணுவப் பட்டியோ அல்ல. எந்த ஓர் இராணுவ வன்முறைக்கும் உட்படாத - சாதாரணமாக எல்லோரும் அணிகின்ற - துணிகளால் செய்யப்பட்டபட்டி இது. பெண்போராளிகள் இதனை அணிவதைத் தடுப்பது மனித உரிமை மீறலும் யுத்தநிறுத்த மீறலும் ஆகும். எமது தரப்பால் மேற்கொள்ளப்படும் யுத்தநிறுத்தமீறல் எனக் கருதப்படும் செயல்களைப் படைத்தரப்பினர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிடமுடியும். இதுவே வழமையான நடவடிக்கை. பெண் போராளிகள் அணியும் இடுப்புப்பட்டி தொடர்பில் படைத்தரப்புச் செயலகத்தால் வெளியிடப்பட்ட தீர்மானம் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவருக்கு தெளிவுபடுத்தியதுடன். அதன் மாதிரியையும் சென்றவாரம் காட்டியிருந்தோம். அவர், அது இராணுவப் பொருள் அல்ல என்பதை ஏற்றுக் கொண்டார். அத்துடன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையில், படைத் தரப்பினருடன் இது பற்றி கலந்தாலோசிப்பதற்காக புதன் கிழமை மாலை 3 மணிக்கு கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் சந்திப்பதற்கும் திட்ட மிடப்பட்டிருந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே மானிப்பாய்ப் பகுதியில் அரசியல் பணிகளுக்காக வழமைபோல் வீதியால் சென்றுகொண்டிருந்த எமது பெண்போராளிகள் 8 பேரை திட்டமிட்ட அடிப்படையில் - தயார்ப்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கு அமைவாக - காத்திருந்து வழி மறித்து - பொல்லுகள், கம்பிகள், கூரிய கத்திகள், இரும்புச் சங்கிலிகள் போன்ற ஆயுதங்களால் துப்பாக்கி முனையில் தாக்கியுள்ளனர். ஒரு பெண் போராளியை பத்து ராணுவத்தினர் வீதம் தாக்கியிருக்கின்றனர். அவர்கள் அணிந்திருந்த இடுப்புப்பட்டிகளையும் பறித்தெடுத்தனர். அதே வேளை, அங்கு திரண்ட மக்கள் அதனைத் தடுக்க முற்பட்டபோது அவர்களும் தாக்கப்பட்டனர். இந்நடவடிக்கைக்கு ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பலும் இராணுவத்துக்கு உடந்தையாக இருந்தது. - இச்செயல் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இராணுவத்தினரின் அத்துமீறிய இச்செயலானது இன்றைய சமாதானத்துக்கான காலத்தில் நிரந்தர சமாதானத்துக்காக தம்மை அர்ப்பணித்து நிற்கும் எம்மையும், எமது மக்களையும் வேண்டுமென்றே சீண்டி - எம்மை அவமானப்படுத்தி - யுத்தத்துக்கு வலிந்து அழைப்பதையே வெளிக்காட்டி நிற்கிறது.

எமது மக்களினது போராட்ட உணர்வை, கலாசார உணர்வை, பண்புணர்வை, வீர உணர்வை பாதிப்புக்குட்படுத்தி சமாதானத்துக்குச் சாவு மணி அடிக்க முனைகிறார்கள். மேற்படி சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு உடனடியாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் நாமும் சென்று நிலைமையினை பார்வையிட்டோம். நடந்த சம்பவத்தை பார்வையிட்ட கண்காணிப்புக் குழுவினர், அங்கு கூடி நின்ற மக்கள் முன்னிலையில் - இச்சம்பவம் ஒரு பகிரங்க யுத்தநிறுத்த மீறல் என்பதை உறுதிசெய்தனர்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தில் நின்ற மக்கள் இத்தகைய சம்பவம் நடைபெறாதிருப்பதை உறுதி செய்யுமாறு கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுக்கொண்டபொழுது அங்கு வந்த விசேட படையினர் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையிலேயே அவர்களைத் தாக்கினர். இதுவும் ஒரு யுத்த நிறுத்த மீறலாகும். இது தொடர்பாக இன்று (புதன்கிழமை) மாலை கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் ஒன்றுகூடி எமது கண்டனத்தை தெரிவித்தோம்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத் தலைவர், கடந்த 7 மாத காலத்தில் நடந்த பாரிய யுத்தநிறுத்த மீறல் சம்பவம் இதுவெனத் தெரிவித்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரை வெளிப்படுத்துவதுடன், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் -

இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடர்வதை அனுமதிக்கக் கூடாது என்றும் நாங்கள் சுட்டிக் காட்டினோம்.

எம்மீதும், எமது மக்கள் மீதும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யுமாறு கண்காணிப்புக் குழுவிடமும், படைத்தரப்பிடமும் கேட்டுக்கொண்டோம்.

- இவ்வாறு தெரிவித்தார் இளம்பரிதி. (ஐ-9)


## மரண அறிவித்தல்

### நாகர் கணபதிப்பிள்ளை

கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயைச் சேர்ந்த நாகர் கணபதிப்பிள்ளை நேற்று (12.02.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் இராசலச்சுமி, சந்திரலிங்கம், சிவசுந்தரலிங்கம், மகாலிங்கம் (பிள்ளையார் பெற்றல் கிறசர் மல்லாகம், ஈஸ்வரன் பெற்றல் கிறசர் பங்காளர்), றஜனி, விலாசினி, சாந்தினி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2003) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

விளையாட்டு அரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்.
பிள்ளைகள்.

(144/38)


# பொது நூலகத் திறப்பு விழா கட்சிக்கு அப்பாற்பட்ட விடயம்

## அதில் கலந்துகொள்வேன் என்கிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். நூலகத்தைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மாநகரசபை நிர்வாகமே மேற்கொண்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அந்த ஏற்பாடுகளுக்கும் தொடர்பு இல்லை. என்றாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினர்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளை ஏற்று திறப்பு விழாவில் கலந்து கொள்ள சம்மதித்தேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்தார். சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியிருக்கும் யாழ்.பொதுநூலகத் திறப்புவிழா தொடர்பாக தங்களது நிலைப்பாடு என்ன என்று அவரைக் கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பொது நூலகம் உலகத்தமிழர் களின் பொக்கிஷம். நீண்டகாலமாக அது கைவிடப்பட்டுக் கிடந்தது. அதனை அப்படியே விட்டு வைப்பது தமிழர்களுக்கு நல்லதல்ல.

ஒரு வீட்டைக்கட்டுபவர் கட்டட வேலை முடியுமுன்ரே குடிபுகுந்து அதில் இருந்துகொண்டே எஞ்சிய வேலைகளைச் செய்து முடிப்பது வழமையல்லவா? அது போல நூலகத்தைத்திறந்து அதில் பணிகளை ஆரம்பித்துக்கொண்டு மேற்கொண்டு வேலைகளை முன்னெடுக்கலாம் தானே?

நூலகம் திறக்கப்பட்டால் உலகெங்குமிருந்து நூல்கள் பெரும் தொகையில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். மாணவர்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும். நான்கூட இந் நூலகத்தில் படித்துத்தான் பட்டம் பெற்றேன். என்னைப்போல பலர் இங்கு கல்வி பெற்றிருக்கின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்த வகையில் ஞாயமாகும் என்பது புரிய வில்லை. இது எனது அபிப்பிராயம் ஆகும்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மாநகர சபையை நிர்வகித்து வந்த மேஜரும் உறுப்பினர்களும் நூலகத்தை தங்களது பதவிக்காலத்தில் திறந்து வைக்க விரும்புவதில் என்ன தவறு இருக்கிறது?

நூலகத்தைத் திறந்து வைக்கும் தீர்மானத்தை எடுத்தது மாநகர சபை நிர்வாகம்தான் அதில் கட்சிக்கு எந்தத தொடர்பும் இல்லை.

மூத்த தமிழ் நாடாளுமன்ற அரசியல்வாதி என என்னைக்கருதி, நூலகத்தை வந்து திறந்து வையுங்கள் என்று அவர்கள் என்னைக் கேட்டனர். அதனை நான் ஏற்றுக்கொண்டேன். வெள்ளிக்கிழமை திறப்பு விழா நடந்தால் அதில் நான் கலந்துகொள்வேன். அவர்களுக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் அல்லவா?

- இவ்வாறு தெரிவித்தார் ஆனந்தசங்கரி. (ஐ)

# பெண் போராளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனே முகாமுக்குள் இருந்த படையினர் கொட்டன்கள், கத்திகள் கோடரிகளுடன் வெளியே பாய்ந்து வந்து பெண் போராளிகளைக் கலைத்துக் கலைத்துத் தாக்கினர். வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நால்வர் உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் நால்வர் அடி காயங்களுக்கு உள்ளாகினர்.

பெண் போராளிகளைத் தாக்கிய படையினர், போராளிகள் அணிந்திருந்த மேல்சட்டைகளை இழுத்து பட்டிகளைக் கழற்றிச் சென்றனர்.

இவ்வேளையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரியும் அங்கு விரைந்து வந்தார். "படையினர் எங்களைக் கட்டிப்பிடித்து சட்டை 'பட்டன்' களைக் கழற்றி பலாத்காரமாக நாம் அணிந்திருந்த சாதாரண பட்டிகளை கழற்றினர். நாம் இராணுவப் பட்டிகளை அணிந்திருக்கவில்லை. எமக்கு எமது பட்டிகளை மீளப்பெற்றுத் தரவேண்டும்" என்று பெண் போராளிகள் கண்காணிப்புக் குழு அதிகாரியிடம் கோரினர்.

படையினர் தமது இடுப்புப் பட்டிகளை ஒப்படைக்காவிட்டால் அந்த இடத்தில் இருந்து வெளியேறப்போவதில்லை என்றும், பெண் போராளிகள் அவரிடம் தெரிவித்தனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அதிகாரி ஒலே புரொணடம், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியுடன் அங்கு கலந்துரையாடினார். பெண் போராளிகளிடம் சம்பவம் குறித்த வாக்குமூலத்தைப் பெற்ற பின்னர் சம்பவ இடத்தை அவர் பார்வையிட்டார். கண்காணிப்புக் குழு அதிகாரி, படை அதிகாரிகளுடன் இரு தடவைகள் பேசினார். ஒரு பட்டியை மட்டுமே மீட்டதாகத் தெரிவித்த படைத்தரப்பு அந்தப் பட்டியை கண்காணிப்புக் குழுவிடம் கையளித்தது.

அங்கு கூடிய நூற்றுக்கணக்கான பொதுமக்கள், "போராளிகளிடமிருந்து கைப்பற்றிய பட்டிகளை மீள ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் முகாமுக்குள் புகுந்து அவற்றை மீட்கப் போகிறோம்" என்று கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் தெரிவித்தனர்.

இதனால், நிலைமை மோசமடைவதைத் தவிர்ப்பதற்காக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி, விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியுடனும், பொதுமக்களுடனும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தினார்.

தாக்கப்பட்ட பெண் போராளிகளின் பெயர்கள் வருமாறு:-

ஜமுனா, சுதர்மகள் (இவர் கத்தி வெட்டுக்கு இலக்கானார்), தமிழ்த் தென்றல், சோமகள், கலைமதி, கமலினி, தமிழினி, எழில்.

இவர்களும் இந்தச் சம்பவத்தில் பின்னர் காயமடைந்த சில போராளிகளும் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இராணுவத்தினரின் தாக்குதலினால் பொதுமக்கள் பலருக்கு உட்காயங்கள ஏற்பட்டிருக்கின்றன.

கண்காணிப்புக் குழு அதிகாரி அங்கு பிரசன்னமாகியிருந்தவேளை அவர் முன்னிலையில் வைத்தும் பொதுமக்களைப் படையினர் தாக்கியிருக்கின்றனர்.

இராணுவத்தினர் தாக்கியதையடுத்து பெரும் எண்ணிக்கையானோர் தமது சைக்கிள்கள் மற்றும உடைமைகளைக் கைவிட்டு ஓடினார்கள். கைவிட்டு ஓடிய சைக்கிள்களை பொலீஸார் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பஸ் ஒன்றில் வந்த இராணுவத்தினர் பஸ்ஸில் சென்றவாறே பஸ் மிதிபலகையில் நின்று கொண்டு வீதியால் வந்த பொதுமக்களைக் கண்டபடி தாக்கினார்கள். இதனால், மானிப்பாய் பகுதியில் பதற்ற நிலை உருவாகியது.

(ஐ-3-8-15-17-86-135)

## இத்தாலி செல்ல முயன்ற 45 பேர் கைது!

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல ஆயத்தமாகியிருந்த 45 பேர் நேற்று அதிகாலை தங்காலை, குடாவெல்ல மீன்பிடி இறங்குதுறையில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

வென்னப்புவ, தங்கொட்டுவ, யாழ்ப்பாணம், வவுனியா, தலவாக்கல, நீர்கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்களைத் தங்காலை விசேட பொலீஸ் குழு ஒன்று கைது செய்தது.

இவர்களில் 39 பேர் தமிழர்கள் எனவும், 6 பேர் சிங்களவர்கள் எனவும் - தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இத்தாலி நோக்கி பயணம் செய்ய தயாராக வைக்கப்பட்டிருந்த வள்ளத்தைப் பொலீஸார் கைப்பற்றினர். 38 அடி நீளமான அந்த வள்ளம் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானதென பொலீஸார் தெரிவிக்கின்றனர். (எ)

## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: இந்தியா

ஆட்டநாயகன்: டி லீட். முடிவு: விக்கெட்டுகளால் இந்தியா வெற்றி

### இந்தியா

| | | | துடுப்பாட்டம் |
|---|---|---|---|
| எஸ்.கங்குலி | c/சிமிற்ஸ் | b/லெப்ரோவ் | 08 |
| எஸ்.டென்டுல்கர் | c/சிமிற்ஸ் | b/டி லீட் | 52 |
| வி.ஷேவாக் | c/ஸுய்ன்டெறன்ட் | b/குளோபன்பர்க் | 06 |
| ஆர்.திராவிட் | | b/டி லீட் | 17 |
| யுவராஜ் சிங் | | c&b அடில் ராஜா | 37 |
| எம்.கைவ் | c/லெப்ரோவ் | b/அடில் ராஜா | 09 |
| டி.மொங்கியா | run out குளோபன்பர்க்/டி லீட் | | 42 |
| ஹர்பஜன் சிங் | | b/டி லீட் | 13 |
| அனில் கும்ளே | run out ஸ்கொட்/டி லீட் | | 09 |
| சஹீர்கான் | lbw | b/டி லீட் | 00 |
| ஸ்ரீநாத் | not out | | 00 |
| உதிரிகள் | | | 11 |
| மொத்தம் | (48.5 ஓவர்கள்) | | 204/[illegible] |

[illegible]

ஷிபேர்லி : 10-2-49-0, லெப்ரோவ் : 9-1-27-1, டி லீட் : 9.5-0-35-4, குளோபன்பர்க்:10-0-40-1, அடில் ராஜா 9-0-47-2, வான் ட்ரூஸ்ட்:1-0-4-0

### ஹொலன்ட்


| | | | துடுப்பாட்டம் |
|---|---|---|---|
| குளோபன்பர்க் | c/ஷேவாக் | b/ஸ்ரீநாத் | 00 |
| வான் பன்ஜ் | | b/ஸ்ரீநாத் | 62 |
| ஜான் மோல்ட் | c/திராவிட் | b/ஸ்ரீநாத் | 02 |
| ஸுய்ன்டெறன்ட் | c/ஷேவாக் | b/கான் | 00 |
| டி லீட் | c/திராவிட் | b/ஹர்பஜன் | 00 |
| வான் ட்ரூஸ்ட் | c/திராவிட் | b/கும்ளே | 05 |
| ஸ்கொட் | lbw | b/கும்ளே | 01 |
| லெப்ரோவ் | lbw | b/கும்ளே | 25 |
| ஷிபேர்லி | c/மொங்கியா | b/கும்ளே | 13 |
| சிமிற்ஸ் | c/ஷேவாக் | b/ஸ்ரீநாத் | 26 |
| அடில் ராஜா | not out | | 00 |
| உதிரிகள் | | | 28 |
| மொத்தம் | (48.1 ஓவர்கள்) | | 136/15 |

பந்துவீச்சு

ஸ்ரீநாத்: 9.1-1-30-4, டென்டுல்கர் 4-0-9-0, ஷேவாக்: 3-0-6-0, கான்:8-1-17-1, ஹர்பஜன்:10-1-20-1 கும்ளே:10-1-32-4 கங்குலி:4-0-14-0

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.







மானிப்பாயில் நேற்று விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. அவ்வேளையில் அங்கு எடுக்கப்பட்ட படங்களில் சில இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# நிராயுதபாணிகளான போராளிகளை சோதனை செய்வதை ஏற்கமுடியாது!

## மானிப்பாய் சம்பவத்தை கூட்டுறவு சமாசம் கண்டிக்கிறது

நேற்று மானிப்பாயில் பெண் போராளிகள் படையினரால் தாக்கப்பட்டிருப்பது தொடர்பாக யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் நிராயுதபாணிகளான பெண் போராளிகள் இராணுவத்தினரால் தாகக்கப்பட்ட சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கது.

நிராயுதபாணிகளான இந்தப் பெண் போராளிகளைப் பரிசோதிக்க வேண்டிய தேவை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அது நியாயப்படுத்தக்கூடியதும் அல்ல.

இந்த நாடே யுத்தமில்லாத சமாதான சூழ்நிலையை உருவாக்க முயன்று கொண்டிருக்கையில், ஆயுதப் படைகளின் ஒரு பிரிவினர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உதாசீனம் செய்து, தமது இனவாத உணர்வுகளை வெளிப்படுத்தும் அநாகரிகமான நடவடிக்கைகள் அரசினாலும், இராணுவத் தரப்பினாலும் முழுமையாகத் தடுக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும். அப்பொழுதுதான் அரசின் சமாதான விசுவாசத்தை தமிழ் மக்கள் நம்பலாம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-17)



# ஒரு தடவையல்ல; இரு முறைகள் யாழ்.நூலகம் அழிக்கப்பட்டது!

## முன்னாள் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாண பொது நூலகம் எதிர்வரும் பதின்நான்காம் திகதி திறந்து வைக்கப்படும் விடயம் சர்ச்சைக்குரியதாக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாண பொது நூலகம் பேரினவாதிகளால் அழிக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்ற போது அதை நிர்வகித்த யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளராக இருந்தவரும் தற்போது யாழ். மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவருமான சி. வி. கே சிவஞானம் இது தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.

இன்று பொதுநூலகத் திறப்பு விழா விடயத்தில் கருத்துக் கூறும் இரு தரப்பினரும் நூலகம் 1981 மே 31இல தீக்கிரையாக்கப்பட்டது பற்றி மட்டுமே பேசுகின்றனர்.

ஆனால், அவ்வாறு அழிக்கப்பட்ட இந்த நூலகத்தை மீள் புனரமைப்புச் செய்ய் 30.05.1983 வரை பதவியில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி முதல்வர் இராசா விசுவநாதன் தலைமையிலான சபையும், அப்பொழுது அவர்களோடும், அதன் பின்னரும் தனியாக நானும் பல முயற்சியெடுத்து, நிதிசேகரித்து இந்த நூலகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

இதைப் பல எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் குறிப்பாக அரசின் எதிர்ப்புக்கு மத்தியிலும் 04.06.1984 ஆம் திகதி அமரர் அமிர்தலிங்கம் மூலம் - அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத போது - இந்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நூலகமும் அதன் பகுதிகளும் இதுவரை தமிழர்களாலேயே திறந்து வைக்கப்பட்டுள்ளன. வேறு யாராவது இனிமேல் திறந்து வைப்பார்கள் என யாராவது கூறினால், அது எம்மினத்தின் ஆளுமையை குறைத்து மதிப்பிடுவதாகும்.

அவ்வாறு மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். பொதுநூலகம் 10.05.1985 ஆம் திகதி மீண்டும் சிங்களப் போர்வாத சக்திகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டு, அதன் செயற்பாடுகள் முடக்கப்பட்டன.

இந்த நூலகம், சிங்களப் பேரினவாதிகளால் இருமுறை அழிக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மை வசதியாக பலராலும் மறைக்கப்படுவது மிகவும் கவலைக்குரியது.

இது ஒருபுறமிருக்க இந்த நூலகம் திறப்பது ஒரு சர்ச்சைக்குரியதாகி விட்டமை மிகவும் வருந்தத்தக்கது. இது எமது வரலாற்றுப் பொக்கிஷம். இதன் திறப்பு விழா இப்படி ஒரு நிலைக்கு உள்ளாக்கப்படக் கூடிய சூழ்நிலை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

நவீன முன்னேற்றங்களைக் கருத்திற் கொண்டே இதன் கட்ட, தளபாட, உபகரண அமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். கணனிப் பாவிப்பு, இன்ரநெற் பாவனை போன்ற வசதிகள் எதுவும் இன்னும் செய்யப்படவில்லை அத்துடன், பல வேலைகள் இன்னும் முழுமையாக பூர்த்தியாக்கப்படவில்லையென தெளிவாகத் தெரிகிறது.

உண்மையில் இந்த நூலகத்தை தமது பதவிக் காலத்துக்குள் திறந்து வைக்கவேண்டும் என மாநகர முதல்வரும் சபையும் கருதியிருந்தால் முழு வேலைகளையும் பூர்த்தியாக்குவித்து திறப்பு விழாவை செய்திருக்கலாம் அப்படிச் செய்யாமல் அரைகுறையாக நூலகத்தை திறப்பது அவர்களுக்கும் கௌரவமல்ல, தமிழினத்துக்கும் கௌரவமல்ல.

யாழ்.பொதுநூலக திறப்பு விழா எதிர்ப்புக்கும் போராட்டத்துக்கும் மத்தியில் நிகழ்ந்தது என்ற கறைபடிந்த வரலாறு எமது நூலகத்துக்கு ஏற்படவேண்டாம். பிடிவாதமாகத் திறந்து, அது சர்ச்சைகளின் தொடர் மையமாக விளங்கக்கூடாது.

யாழ்மாநகர சபையைப் பொறுத்த வரை இது ஒரு பெரிய கௌரவப் பிரச்சனை அல்ல.

எனவே, மாநகர முதல்வரும், சபையினரும், நிர்வாகமும் இந்த விடயத்தை மறுபரிசீலனை செய்வது மிகவும் விரும்பத்தக்கது. அவர்கள் அவ்வாறு செய்து திறப்பு விழாவை இரத்துச் செய்யவேண்டும் எனக்கோருகிறேன். (ஐ-17)


# உதவி ஆசிரியர்கள் அலுவலகச் செய்தியாளர்கள் ஒப்புநோக்குநர்கள்

## மேற்கண்ட பதவிகளில் பயிலுநர்களாக இணைந்து கொள்ள தகுதியானவர்கள் ஆட்சேர்க்கப்படவுள்ளனர்

★ உதவி ஆசிரியர்கள்/அலுவலகச் செய்தியாளர்கள்
(ஆண்கள் மட்டும்)
*கல்வித்தகைமை :* ஆகக் குறைந்தது ஜீ.சீ.ஈ. உயர்தரம். மொழி ஆற்றலும் எழுத்து வன்மையும் கைவரப் பெற்றவராக இருப்பதுடன் ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும். களப் பணி புரியக்கூடியவராகவும் இரவிலும் கடமையாற்றத் தயாராகவும் இருத்தல் அவசியம்.
ஆறுமாத கால பயிற்சிக்குப் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
வயது எல்லை : 25-35

★ ஒப்புநோக்குநர்கள் (தமிழ் மொழி மூலம்)
(ஆண்கள் மட்டும்)
*கல்வித்தகைமை :* ஜீ.சீ.ஈ. உயர்தரம். தமிழில் ஆழமான புலமை. இரவிலும் பணியாற்றக்கூடிய உடற்தகைமை.
வயது எல்லை : 24-40
ஆறுமாத கால பயிற்சியின் பின் நிரந்தர நியமனம்.

★ ஒப்புநோக்குநர் (மொழி மூலம் ஆங்கிலம்)
(ஆண்கள் மட்டும்)
*கல்வித்தகைமை :* ஆகக்குறைந்தது ஜீ.சீ.ஈ. உயர்தரம். ஆங்கில மொழியில் ஆழமான புலமை. இரவிலும் கடமையாற்றக்கூடியவராக இருத்தல் அவசியம்.
வயது எல்லை : 30-40

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்துடன்
எழுத்துப் பரீட்சைக்குத் தயாராக நேரில் வரவும்.

எழுத்துப் பரீட்சை 18.02.2003 அன்று முற்பகல் 10.00 மணிக்கு உதயன் பணிமனையில் நடைபெறும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு வாடகைக்குத் தேவை

உயர்தொழில் புரியும், கௌரவமான சிறிய குடும்பத்திற்கு, யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது கொக்குவில், கோண்டாவில், நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் வசதியான வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கேட்கப்படின் நியாயமான தொகை வழங்கப்படும். தொடர்பு: 222 3906. (14414)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (14416)

## வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து புதிய வகுப்புகள் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறுகின்றன. தொடர்பு: 5, அம்மன் வீதி (வைரவர் கோயில் முன்பாக), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (14397)

## மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

நல்லூர்,பெப்.12

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதய நிறுவனம் மிதிவெடி தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றினை கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வயல்வெளி கந்தசுவாமி ஆலய முன்றலில் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-றி)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

தென்மராட்சி,பெப்.13

தென்மராட்சி பிரதேசத்தில் யுத்தத்தின்போது அழிக்கப்பட்ட தென்னை மரங்களை ஈடுசெய்வதற்கு மீளநடுகைத் திட்டத்தின்கீழ் மேலும் 3ஆயிரம் தென்னங்கன்றுகள், தென்னை அபிவிருத்தி சபையினர் மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து வழங்கினர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு தலா மூன்று தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஒ-117)

## இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழா

அரியாலை,பெப்.13

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சற்குரு தியாகராஜ சுவாமிகளின் ஆராதனையும் மதியபோசனமும் இடம்பெறும்.

இந்த முறை இடம்பெறும் இசை நிகழ்ச்சியில் சுமார் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றவுள்ளனர் என்று மன்றப் பொருளாளர் சு.பாலசண்முகநாதன் தெரிவித்தார்.

நிகழ்வுகள் யாவும் மன்றத்தின் மண்டபத்தில் நடைபெறும். (ஐ-17)

## இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

வலி.வடக்கு,பெப்.13

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன் ஆஜர்செய்யப்பட்ட பத்து இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி சரோஜினி இளங்கோவன் பணித்துள்ளார்.

இதேநேரம் இம்மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு வள்ளங்களும் கடற்படையினரிடம் உள்ளதாகவும் -

மீன்பிடி வலைகள் உட்பட ஏனைய பொருள்கள்யாவும் காங்கேசன்துறை பொலீஸாரினால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் மேலதிக பணிப்புரையை எதிர்பார்த்து இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் இதுசம்பந்தமாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-85)


# JAFFNA COLLEGE

Cordially invites you to its

ANNUAL INTER - HOUSE ATHLETIC MEET

to be held on

FRIDAY 14 TH FEBRUARY 2003 at 2.00 p.m.

on the Bicknell grounds

under the distinguished patronage of

Mr. P.VIGNESWARAN

(Director of Education - Jaffna Zone)

&

Mrs. T.VIGNESWARAN

(C/26488) Principal & Staff.



## யாழ். மாநகரசபை உறுப்பினரை பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லூர் கமநல சேவைக் குழுவின் தலைவராக

நீண்டகாலம் பணியாற்றிவரும்

பழமொழிச் செல்வர்

உயர்திரு. க.சத்தியானந்தசிவம்

(சச்சி மாஸ்ரர்)

அவர்கள் கடந்த 03.02.2003 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் யாழ்.மாநகர சபையின் உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உதவி ஆணையாளரும்,

கமநல அபிவிருத்தித் திணைக்கள

உத்தியோகத்தர்களும்,

நல்லூர் கமநல சேவை நிலைய

உத்தியோகத்தர்களும்,

கமநல சேவை குழு உறுப்பினர்களும்,

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

உத்தியோகத்தர்கள்.

(C/26494)



கணபதி துணை

## நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பஞ்ச தள இராஜ கோபுரத்துக்கும் சித்திரத் தேருக்கும் வர்ணம் பூசுவதற்கான கேள்வி அறிவித்தல்

எமது ஆலயத்தின் பஞ்ச தள இராஜகோபுரத்துக்கும் சித்திரத் தேருக்கும் வர்ணம் பூசுவதற்கான கேள்விகள் ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.

1. பஞ்ச தள இராஜகோபுரத்துக்கு (ஓயில் பிறைமர்) ஆரம்ப பெயின்ற் இரு தடவைகள் பூசுதல்.
2. பொம்மைகள் உட்பட அதற்குரிய வர்ணந்தீட்டுதல்.
   ஆகமவிதி முறைப்படி இரு தடவைகள் பூசுதல்.
   பஞ்ச தளத்துக்கு இரு தடவைகள் வர்ணம் பூசுதல்.
3. சித்திரத் தேருக்கு வர்ணம் பூசுதல்.

மேற்படி வேலைகளுக்கான கேள்விகள் (அதற்குரிய கூலியை விவரமாகக் குறிப்பிட்டு) எதிர்வரும் 20.02.2003ஆம் திகதிக்கு முன் (ஒப்பந்தப் படிவங்களை) கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

*ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில்,*
*நீர்வேலி* (14407) - ஆலய பரிபாலன சபையினர்.



## பதவி வெற்றிடங்கள்

யாழ்நகரில் உள்ள பிரபலமான விநியோக நிறுவனமொன்றிற்கு பின்வரும் வேலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுய விபரங்களுடன் 19.02.2003 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

01. விற்பனைப் பிரதிநிதிகள்
    Sales Representative
02. களஞ்சியக் காப்பாளர்
    Store Keeper
03. களஞ்சிய உதவியாளர்
    Stores Assistant
04. விநியோக வாகன உதவியாளர்
    Van Delivery Man

விளம்பர இல. 1779,

மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (14415)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பூவுலகில் 25 - 03 - 1923

வானுலகில் 14 - 01 - 2003

### அமரர் கணபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை

(முன்னாள் சாரதி C.T.B. பருத்தித்துறை)

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு "ஐயா"என அழைக்க நீங்கள் இல்லையே ஐயா! உங்கள் உடல் எம்மை விட்டுச் சென்றாலும் உயிர் எங்களை விட்டு அகலாது!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நுங்கள் நினைவுடன்:

*"பெரிய வளவு"*
*புலோலி தெற்கு, புலோலி.*

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (14406)



# Situations Vacant - The HALO Trust

### Office Manager

Office Manager with at least 3 years experience needed to run a busy office, administering over 100 staff.

*Requirements:*

Self motivated and dedicated

Experienced in accounting and administrative procedures.

Thorough knowledge of MS Office.

Excellent English, both verbal and written.

Up to 50,000 R's. PCM.

### Office Assistant

Office Assistant with at least 12 months experience. Must be self motivated and have experience of accounting. Excellent English and computer skills essential. Up to 25,000 R's. PCM.

### சிரேஷ்ட மருத்துவர்

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பெரும் உடற்காயங்கள், மன அதிர்ச்சி போன்ற நோய்களைக் கையாள்வதில் அனுபவமும் திறமையும் சிறந்த பயிற்சிகளை வழங்கும் ஆற்றலும் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் வைத்திய கலாநிதியாகவோ அல்லது தாதியாகவோ இருக்கவேண்டும். தெரிவுசெய்யப்பட்டால் அரசசார்பற்ற நிறுவனம் தொடர்பாக மருத்துவம் சார்ந்த துறையில் சகல விடயங்களையும் மேற்பார்வை செய்யவேண்டும். மருந்து வகைகளும் மருந்து விநியோகமும், களஞ்சியப்படுத்தலும் நிர்வகித்தலும், பயிற்சியளித்தல் பயிற்றப்பட்ட பணியாளர் தொடர்பான தொடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் ஆகியன முக்கிய பொறுப்புகளாகும். ரூபா 25,000/- வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும்.

### மெக்கானிக்

டீசல் மற்றும் ஹைட்ரோலிக் இயந்திரங்கள் தொடர்பான தெளிவான அறிவுடைய, அனுபவமிக்க இயந்திர மெக்கானிக் தேவை. சங்கிலியில் செயற்படும் (புல்டோசர் போன்ற) வாகனங்கள் மற்றும் மண்வாரி தொடர்பான அனுபவங்கள் மேலதிக தகைமைகளாகும். ரூபா 20,000/- வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும்.

### சாரதிகள்

"ஏ" வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரமுடைய 5 சாரதிகள் தேவை. ரூபா 10,000/- வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும்.

**HALO Trust**

655, நாவலர் றோட்,

நல்லூர், யாழ்ப்பாணம். (14418)


# மரண அறிவித்தல்கள்

## இராசதுரை ஜீவரெட்ணம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை ஜீவரெட்ணம் (ஓய்வுபெற்ற கடற்படைத்தள உத்தியோகத்தர்) அவர்கள் 2003.02.11 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - திருமதி நாகம்மா அவர்களின் அன்பு மகனும் கல்யாணியின் (இந்திரா) அருமைக் கணவரும் கந்தையா - கனகம்மா தம்பதிகளின் (யாழ்ப்பாணம் கனகசபை அவெனியூ) நேசமிகு மருமகனும் யாமினி, யபிதா, நிரஞ்சன் ஆகியோரது பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற முருகையா, செல்வநாயகம், நீலலோஜினி (பெரியபுலம் மகா வித்தியாலயம்), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரது அன்புச் சகோதரரும் தர்மகுலசிங்கம் (இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்), புவிராஜசிங்கம் (கனடா), இராஜகுலசிங்கம் (கனடா), விஜயகுலசிங்கம் (கனடா), செல்வஜோதி (கனடா), புஸ்பஜோதி (கனடா), டாக்டர் பஞ்சகுலசிங்கம் (நோர்வே), பிறேமஜோதி (கனடா), சரோஜினிதேவி, வசந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட லீலா, மணிமேகலை (சசி), கீதாஞ்சலி, ரவீந்திரன், சிவந்தன், இளங்கோ ஆகியோரினதும் மோனிக்கா (நோர்வே) வினதும் பிரிய சகலனும் வேந்தன், தேவி, அன்பரசன், தமிழரசன் ஆகியோரின் சித்தப்பாவும் குகதாசன் (கனடா), ஸ்ரீப்பிரியா, சாவித்திரி ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2003) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இல.44, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலையில் இருந்து இறுதிக்கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.44, கந்தசாமி கோவில் வீதி,*
*திருகோணமலை.*
*026 - 22972* (C/26493)

தகவல்:
ஜீவரெட்ணம் நிரஞ்சன (மகன்),
கந்தையா தர்மகுலசிங்கம (மைத்துனர்)

## சுப்பிரமணியம் அமிர்தலிங்கம்

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 58, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் (11.02.2003) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளையின் அருமை மகனும் சுப்பிரமணியம் - லட்சுமியின் மருமகனும் செங்கமலத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தமயந்தி மற்றும் மலர்மதி, பூமதி, நித்தியானந்தன் (தம்பி தேநீர்ச்சாலை), சுமதி, அப்பன் (கருமாரி நகையக ஊழியர்), பிரபு ஆகியோரின் தந்தையும் அப்பையா, பார்வதி, இராமலிங்கம், கனகசபை, நடராசா, காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கமலாம்பிகை, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் லீலாவதி, பூவிலிங்கத்தின் மைத்துனரும் மோகன், நிருச்செல்வத்தின் மாமனாரும் மிது, சுபா, திலக்சி, தர்ஷன், தனுஷா, தீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*58, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (14404)

தகவல்:
தம்பி தேநீர்சாலை
(உரிமையாளர்)

# மெய்வன்மைப் போட்டிகள்

வலி.மேற்கு,பெப்.13

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா தலைமையில் நடைபெற இருக்கும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திர பிள்ளை கலந்துகொள்வார்.(ஒ-175)

★ ★ ★

வலி.மேற்கு,பெப்.13

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி பங்கேற்பார்.(ஒ-175)

★ ★ ★

சண்டிலிப்பாய்,பெப்.13

இளவாலை புனித ஹென்றியரசா கல்லூரியும், இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.அடைக்கலநாதன கலந்துகொள்வார். (ஒ-135)

★ ★ ★

குருநகர்,பெப்.13

நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.நாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ஒ-51)

★ ★ ★

நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சுகவாழ்வு நிலையப் பணிப்பாளர் வண.பிதா எஸ். டேமியன், கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

## விளையாட்டு

### மத்தியஸ்தர்களுடன் முரண்பட்ட

# உதைபந்தாட்ட வீரர்களுக்கு போட்டியில் பங்கேற்கத் தடை

வலி.வடக்கு,பெப்.13

அளவெட்டியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகம் ஒன்றின் இரண்டு உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஐந்து வருட காலங்களுக்கு உதைபந்தாட்டத்தில் ஈடுபடுவதற்கு வலி.வடக்கு பிரதேச செயலக விளையாட்டு ஒழுக்காற்றுக் குழுவினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு வலி.வடக்கு பிரதேச செயலகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின்போது மத்தியஸ்தர்களின் தீர்ப்பை ஆட்சேபித்து அவர்களுடன் சர்ச்சையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து விளையாட்டு உத்தியோகத்தர்களின் முறைப்பாட்டின் பெயரில் இவ்விசாரணை இடம்பெற்றது.

இவ்விசாரணையின் பிரகாரம் கழகத்தைத் தொடர்ந்து விளையாட அனுமதிப்பதுடன், சம்பந்தப்பட்ட இரு வீரர்களுக்கு மட்டும் ஐந்து வருடங்களுக்கு போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-5-86)

# யாழ். கல்லூரி எதிர் கொக்குவில் இந்து கிரிக்கெட் ஆட்டம் 'டிரா'வில் முடிந்தது

வலி.வடக்கு,பெப்.13

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையேயான கிரிக்கெட் ஆட்டம் நேரம் போதாமையினால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி முதல் இனிங்ஸ்சில் 315 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் சமதுசன் 157 ஓட்டங்களையும் அ.மனகபிரகாஸ் 72 ஓட்டங்களையும் த.அரவிந்தன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த துயன் 54 ஓட்டங்களையும், தனரன் 64 ஓட்டங்களையும், திலிபன் 57 ஓட்டங்களையும், இராஜ்குமார் 74 ஓட்டங்களையும் கொடுத்து தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்கள்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, முதல் இனிங்ஸ்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

நிறோசன் 47 ஓட்டங்களையும், நிமறோ 25 ஓட்டங்களையும் திலிபன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச.உமாநாத் 32 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், க.பிரகாஷ் 22 ஓட்டங்களைக கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ச.மதுசன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 75 ஓட்டங்களை 8 விக்கெட் இழந்த நிலையில் ஆட்டநேரம் முடிவடைந்தது. (ஒ-86)

### பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டி

# கொக்குவில் இந்து மாணவர் அதிக ஓட்டங்கள் பெற்றார்

வலி.வடக்கு,பெப்.13

பாடசாலை மட்டத்தில் இடம்பெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர் சாந்தநாதன் மதுசன் இவ்வாண்டில் இதுவரை அதிக ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற கிரிக்கெட்டில் ஒரு ஓவரின் ஆறு பந்துகளுக்கும் தலா ஆறு ஓட்டங்கள் வீதம் 36 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

அத்துடன், இப்போட்டியில் இவ்வாண்டில் தனது இரண்டாவது சதத்தையும் பெற்றுக்கொண்டார். யாழ். மத்திய கல்லூரிக்கு எதிராக 127 ஓட்டங்களை அவர் பெற்றார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் 157 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்.

இதன்மூலம் தொடர்ந்து இரண்டு பாடசாலைகளுக்கு எதிரான போட்டிகளில் சதங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-86)

# புனர்வாழ்வுக் கழக அபிவிருத்திப் பணி

தென்மராட்சி,பெப்.13

தென்மராட்சி பிரதேசத்தில் யுத்தத்தினால் மோசமாகச் சேதமடைந்த கல்வயல் (ஜே/305), மட்டுவில் வடக்கு (ஜே/313) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவுசெய்துள்ளனர்.

இதேவேளை - மீசாலை கிழக்கு (ஜே/318), மீசாலை மேற்கு(ஜே/319), கிராமாவில்(ஜே/320), அல்லாரை (ஜே/322), வெள்ளாம்போக்கட்டி (ஜே/323), கச்சாய்(ஜே/324), பாலாவி (ஜே/325), கொடிகாமம் மத்தி(ஜே/327), எழுதுமட்டுவாழ் வடக்கு(ஜே/334) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு விவசாய உபகரணங்களை வழங்க பட்டினிக்கு எதிரான இயக்க நிறுவனத்தினர் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# ஜனசக்தியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.13

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் நடமாடும் சேவையொன்றை எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையில் நடத்தவுள்ளது. அத்தினம் வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களுக்குரிய வாகன காப்புறுதியினைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆகவே, வாகன உரிமையாளர்கள் தகுந்த ஆவணங்களுடன் சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வன்னிப் பிராந்திய மக்கள் காப்புறுதி சேவையினைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் முகமாகவே இச்சேவையினை வழங்குவதாக மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நடேசர் அபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப்.13

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவிலின் வருடாந்தம் நடைபெறும் நடேசர் அபிஷேக விழாவின் முதலாவது அபிஷேகம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

# 32 தொழு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்

கடந்த 2002ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் பரிசோதனைகளின்போது 32 பேர் தொழுநோயாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்தவர்கள் என்று தெரியவருகின்றது.

இப்பிரிவில் 20 பேர் புதிய நோயாளர்களாக இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். தொழு நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால் தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் அல்லது தமது பகுதியிலுள்ள அரசினர் வைத்திய சாலையின் வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொண்டு இதற்கான சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவுறுத்தியுள்ளது.

உடலில் உணர்ச்சியில்லாத - வெளிறிய அல்லது செந்நிற அடையாளங்கள் காணப்பட்டாலோ, சிறிய செந்நிற கட்டிகள் குறிப்பாக காதுச் சோணைப்பகுதியில் காணப்பட்டாலோ கை, கால்களில் தொடர்ச்சியான விறைப்பு இருந்தாலோ தமது பிரிவு அரச வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவை சரிவரக் கடைப்பிடிக்கப்படுமிடத்து இந்த நோய் பிறருக்கு தொற்றுவதிலிருந்தும், அங்கவீனம் ஏற்படுவதிலிருந்தும் தவிர்க்கக்கூடியதாகவிருக்கும். நோய் பற்றிய பூரண அறிவின்மை, அசிரத்தை, விழிப்புணர்வு இல்லாமை, வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்குத் தயக்கம் ஆகியனவே தொழுநோய் தீவிரமடைய முக்கிய காரணங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

# கரம்பகம் மயானப் பகுதியில் முகாம் அமைக்க நடவடிக்கை

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து விரைவில் வெளியேறி கரம்பகம் மயானப் பகுதியில் முகாம் அமைக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

பத்து ஏக்கர் பரப்பளவுகொண்ட இந்த மயானப் பகுதியை படை அதிகாரிகள் சென்று பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கரம்பகம் கிராம அலுவலர் பிரிவு படையினரின் அதி உச்ச பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டதால் அப்பகுதியைச் சேர்ந்த 164 குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமர முடியாதநிலையில் வேறு இடங்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)


## தேவை

அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ்.மாவட்ட விநியோக அலுவலகத்திற்கு லிகிதர்கள் தேவை.

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்).

யாழ். ஏகவிநியோகத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
34, கந்தப்ப சேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

(14423)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 448 |
| திகதி | 11.02.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4746315-4761301

வெற்றி இலக்கங்கள் **20 32 41 42**

லக்சினம் கடகம்




ஜக்பொட் பரிசு ரூபா. 3,067,100/- வெல்லப்பட்டுள்ளது.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 332,437 | 10 | 3,324,370 |
| 2 இலக்கங்கள் | 30,497 | 20 | 609,940 |
| 1 இல + லக்கினம் | 30,276 | 30 | 908,280 |
| 2 இல + லக்கினம் | 2,801 | 100 | 280,100 |
| 3 இலக்கங்கள் | 832 | 500 | 416,000 |
| 3 இல + லக்கினம் | 60 | 5,000 | 300,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,067,100 | 3,067,100 |
| மொத்தம் | 396,907 | - | 9,205,790 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 9,205,790/-

தொடர் இல. 5739138க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 14ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4747350-8-95
4752242-9-08
4753708-4-88
4753814-5-46
4753478-7-01

# மீள்குடியமர்வு கொடுப்பனவு

வலி.மேற்கு,பெப்.13

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த சுமார் 200 குடும்பங்களுக்கு மீள் குடியமர்விற்கான கொடுப்பனவான 25ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இருந்து இந்தக் குடும்பங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. விதவைகளும், பெண்களை குடும்பத் தலைவியராகக் கொண்ட குடும்பங்களும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் உடல், உளரீதியாக பாதிக்கப்பட்ட உறுப்பினரைக்கொண்ட குடும்பங்களுமே முதல் கட்டமாக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-175)

## வாராந்த நிகழ்வு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "அன்னதானக் கந்தன்" என்ற விடயம் பற்றி தொண்டமனாறு வீரகத்தி மகா வித்தியாலய மாணவி செல்வி தர்சிகா பரமானந்தமும், 'வேலுண்டு வினைதீர்க்க' என்ற விடயம் பற்றி சங்கானை சிவப் பிரகாசம் மகாவித்தியாலய மாணவி செல்வி தேவரஞ்சனா புவனேந்திரனும், சொற்பொழிவாற்றுவார்கள். (ஒ-135)


உ
சிவமயம்

ஏழாலை தெற்கு களபாவோடை

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

# ஜெயந்தி விழா

காலம்: 16-02-2003 ஞாயிற்றுக்கிழமை

காலை 9.00 மணிக்கு **பூஜை**

காலை 10.00 மணிக்கு சிவாசார்ய பெருமக்களால் ஆலய மண்டபத்தில் உருத்திரஜெபம் ஜெபிக்கப்படும்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள் கலந்து சிறப்பிப்பர்.

காலை 10.30 மணிக்கு **பாத பூஜை**

காலை 11.00 மணிக்கு **ஆசியுரை**

- சிவஸ்ரீ தியாக.கெங்காதரக் குருக்கள்
- சிவஸ்ரீ தா.மகாதேவாக் குருக்கள்
- சிவத்திரு குமாரசாமி ஐயா அவர்கள்

அருளாசியுரை:

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்

காலை 11.30 மணிக்கு:

ஆதரவற்ற சிறுவர்கள், வயோதிபர்கள், ஊனமுற்றவர்களுக்கான அன்பளிப்புகள் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருங்காட்சி இடம்பெற்று, மாகேஸ்வர பூஜையும் நடைபெறும்.

*அடியார்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

களபாவோடை, (சி-26500) - தேவஸ்தானம்.
ஏழாலை தெற்கு.



# ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தினரின் இன்னும் பல சேவைகள்




Inter Net மூலம்



உங்கள் உறவினர்களுடன் உரையாட

துல்லியமாகவும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில்



இலங்கை முழுவதும் 24 மணி நேரத்தில்

துரித தபால்/பொதிகள் சேவை

மற்றும்



யாழ். - கொழும்பு பிரயாண சேவை

தொலைபேசி வசதிகள், பக்ஸ்(*Fax*), போட்டோ பிரதி, *Computer Type Setting*

தபாற் சேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்துகொள்ள நாடுங்கள்:

## ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

**SRIMURUGAN**

*Telecommunication, Computer System & Agency Post Office* (C/26501)

***303, K.K.S. ROAD, JAFFNA.***

**T.P: 021- 222 2670, 222 3588 FAX: 021- 222 3214 E - MAIL: del-smskr@eureka.lk**



## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்





பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**

அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.



பஜாஜ் - எனது மூத்தவன்

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ. 193,850/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)



பஜாஜ் - எனது காவலன்

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 637175

பிரதேச கிளை அலுவலகங்கள்:

■ 174E, கட்டுகஸ்த்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134 ■ 27 E, வியாபார ஸ்தானம், தெலிபத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222 ■ 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-[illegible] பக்ஸ்: 041-27[illegible]
■ தீகவ மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662 ■ 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050 ■ தன்சிறி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-2[illegible]
■ இல. 116, குருநாகல்வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527


மேல் விபரங்களுக்கு இக் கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்........................................

விலாசம்........................................

சேவை நிலையம் ........................................ தொலை பேசி........................................

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.




Tradlanka